2571

# அபாயகரமான வார்த்தை

ஏ.பி.எம். இத்ரீஸ்



150
இத்ரீ

2571

# அபாயகரமான வார்த்தை

எமது பிள்ளை வளர்ப்புப் பண்பாட்டில் பிரயோகிக்கப்படும் ஆளுமையைச் சிதைக்கும் சில வார்த்தைகளை இந்நூல் பகுப்பாய்வு செய்கிறது

வலி வடக்கு பிரதேச
பொது நூலகம்

# அபாயகரமான வார்த்தை

ஏ. பி. எம். இத்ரீஸ்

உயிரப்பைத் தேடும் வேர்கள்



| | |
|---|---|
| வரவுப்பதிவு எண். | 2571 |
| பகுப்பு எண். | 150 |

**அபாயகரமான வார்த்தை**

ஏ. பி. எம். இத்ரீஸ்

உளவியல் கட்டுரைகள்

முதற்பதிப்பு: ஏப்ரல் 2007
வெளியீட்டு எண் : 08

வெளியீடு
**உயிர்ப்பைத்தேடும் வேர்கள்**
மஹ்மூத் ஆலிம் வீதி,
வாழைச்சேனை - 05
தொலைபேசி: 0094 777 141 649 / 0776 918 138
மின்னஞ்சல்: abmimthath@yahoo.com
பதிப்புரிமை: ஆசிரியர்
வடிவமைப்பு: உயிர்ப்பைத் தேடும் வேர்கள்
அச்சாக்கம்: AJ Prints (Pvt) Ltd., Dehiwala
ISBN 955-99649-5-X

விலை ரூ. 100/-

7 சிறிய வார்த்தை
10 நீ டொக்டராக வேண்டும் அல்லது
என்ஜினியராக வர வேண்டும்
14 உன்னை விட அவன் மேலானவன்
18 நீ சின்னப்பிள்ளை
22 விளையாடுவதை விட்டுவிடு நீ
பெரியவனாகி விட்டாய்
27 எனதுபிள்ளையை என்னால்
கட்டுப்படுத்தவே முடியவில்லை
31 என்னைத் தொந்தரவு படுத்தினால்
டொக்டரைக் கூட்டி வந்து ஊசி
போடுவேன்
36 தற்காலத்துப் பிள்ளைகள் சரியான
புத்திசாலிகள்
40 சும்மா இரு பேசாதே
45 பெரிய மனிதர்கள் அழமாட்டார்கள்
48 நீ என்ன பெண்பிள்ளை மாதிரி
வெட்கப்படுகிறாய்
51 நீ ரொம்ப முரண்பாடானவன்
54 படி.. படி.. படி..
57 எங்கட பிள்ளை நல்ல பிள்ளை
60 உன்னைப் பற்றி வாப்பாவிடம் சொல்லிக்
கொடுப்பேன்

# சிறிய வார்த்தை

வாசகரே...!

உடனடிப்பயனைப் பெறுவதற்காக பெற்றோர் தொடர்ச்சியாக சில வார்த்தைகளைப் பிரயோகித்து வருகின்றனர். அவ்வாறு பிரயோகிக்கப்படும் வார்த்தைகள் நல்லவையாகத் தெரியவில்லை. அவை எமது அடிப்படைக் கோட்பாடுகளையும் வாழ்வியல் விழுமியங்களையும் கடுமையாகப் பாதிக்கின்றன. மிகமோசமான உளவியல் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன.

அபாயகரமான வார்த்தைகளைப் பொதுவாக நாம் மற்ற வார்த்தைகளைப் போலவே அர்த்தமுள்ளவையாக அல்லது அர்த்தம் ஏற்றப்பட வேண்டியவையாகப் பார்க்கிறோம். உதாரணமாக வசைச்சொற்கள் அல்லது சாபமிடும் வார்த்தை. ஆனால் அதுபோன்ற வார்த்தைகளுக்கு அந்த கணநேரத்திற்கு மேலாக அர்த்தங்கள் இருப்பதில்லை. நிகழ்த்துதல்கள் என்று அவற்றைச் சொல்லலாம். உதாரணமாக நாசமாய்ப் போக என்பதைப் போல.

சொற்களும் அவற்றின் ஒலிக்குறிப்புக்களும் தம்முள் ஒளித்து வைத்திருக்கும் அர்த்தங்களின் ஒரு பகுதியைத்தான் நாம் கவனிக்கின்றோம். வார்த்தைகளும் அவை தரும் அர்த்தங்களும் ஒன்றுக்கொன்று தொடர்பற்றவை என்ற கருத்தும் தற்போது நிலவுகின்றது. வார்த்தைக்கும் அது தரும் அர்த்தத்திற்கும் இடையில் நிரந்தர இணைப்பு ஏதும் இல்லை. ஒரு கருத்தைக் கூற குறிப்பிட்ட வார்த்தையைப் பயன் படுத்தினாலும் அது முன்பு புரிந்து கொள்ளப்பட்ட கருத்தில் இல்லாது இன்னொரு கருத்திலேயே வருகிறது என்றும் கூறப்படுகிறது. இங்கே அர்த்தம் என்பது திட்டவட்டமானதல்ல. அர்த்தம் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது.

எனவே வார்த்தைகளை ஒவ்வொருவரும் வித்தியாசமாகவே புரிந்து கொள்கின்றனர். ஒவ்வொருவரின் புரிதலும் அகச்சார்பாக இருப்பதால் இந்த வித்தியாசம் ஏற்படுகிறது. ஆனால் எழுத்தில் இக்கருத்து

மாறுபட்டாலும் பேச்சின் போது வார்த்தைகளைக் கூறும் பெற்றோர் பிள்ளைக்கு முன்னால் பிரசன்னமாயிருக்கின்றனர். அவர்கள் பிள்ளைக்கு முன்னால் தமது உணர்வுகள், எண்ணங்கள், உடல் மொழி அனைத்தையும் பரிமாறுகின்றனர். சைகைகளும் அதற்குப் பயன்படுகின்றன. சுட்டுவிரலை காட்டுதல், உறுக்கிப்பார்த்தல், முகத்தை உம்மென்று வைத்திருத்தல் போன்றவை மோசமான உடல்மொழியாகும். குரலை உயர்த்துவதால் எழும் அதிகாரம் குழந்தைக்கும் பெற்றோருக்குமிடையே ஜனநாயகத்தன்மையை இல்லாமலாக்கிவிடுகின்றது. எனவே வார்த்தைகளின் அர்த்தங்களை கண்டுபிடிப்பதனால் அதிகாரங்கள் எங்கெங்கு மறைந்துள்ளன என்பதையும் கண்டுபிடிக்கலாம்.

ஒருவர் வைத்தியராவதற்கு ஒரு பாடத்திட்டம் இருக்கிறது. கணக்காளராவதற்கு ஒரு பயில்நெறி இருக்கிறது. ஆனால் பெற்றோராவதற்கு அல்லது கணவன் மனைவியாவதற்கு ஒரு பாடநெறி நம்மத்தியில் இதுவரை தோன்றாதது மிகப்பெரும் சோகமாகும். இதனால் எமது குடும்ப நிறுவனத்தில் ஒரு குட்டிச் சர்வாதிகார ஆட்சி ஏற்பட்டு ஜனநாயகக் குடும்பம் இல்லாமல் போய்விட்டது. இது ஏகப்பட்ட பிரச்சினைகளைத் தோற்றுவித்திருக்கிறது. இப்பிரச்சினைகளைத் தோற்றுவிப்பதில் வார்த்தைகள் பெரும்பங்கை வகிக்கின்றன. அல்குர்ஆன் குடும்பவாழ்வைப் பற்றிச் சொல்லும்போது 'அம்சிகூஹுன்ன பி மஃரூபின் அவ் பாரிக்கூஹுன்ன பி மஃரூபின்' என்ற வசனத்திற்கு நல்ல வார்த்தைகளைக் கூறி சேர்ந்துவாழுங்கள் அல்லது நல்ல வார்த்தைகளைக்கூறி பிரிந்துவிடுங்கள் என்றே பெரும்பாலான இமாம்கள் விளக்கமளிக்கின்றனர். எனவே நல்ல வார்த்தைகளைத் தேடிப் பயணிக்க வேண்டும் என்பதும் இக்கட்டுரைகளின் நோக்கமாகும்.

எமது தமிழ்ச்சூழலில் வடமாகாணம், கிழக்கு மாகாணம், மத்தியமாகாணம், மலையகம், தென்மாகாணம் எனப் பல்வேறு மொழிவழக்குகள் நிலவுவதால் குடும்பச் சூழலில் பிரயோகிக்கப்படும் வார்த்தைகளில் காணப்படும் அபாயகரமான நிலையை அல்லது உளவியல் தாக்கங்களை முழுமையாக ஆராயும் பணியை நாம் செய்யவில்லை. ஒரு பொதுப்படையான தெரிவையே நாம் மேற்கொண்டுள்ளோம். இதை அரபுமொழியில் ஆபிதா அல் முஅய்யத் என்ற உளவியல் எழுத்தாளர் செய்துள்ளார். அவருடைய எல்லா ஆக்கங்களும் எமக்குக் கிடைக்கவில்லை. இந்நூலிலுள்ள ஐம்பது வீதக் கட்டுரைகள் அவருடைய கட்டுரைகளைத் தழுவி எமது சூழலை வைத்து மாற்றி எழுதப்பட்டவை.

நமது உளவியல் ஆய்வாளர்கள் இத்துறையில் பிராந்தியம் சார்ந்த கள ஆய்வுகளைச் செய்யவேண்டும். ஏனெனில் பிராந்திய மொழிவழக்குகள் அதன் பிரசன்னம், நிகழ்த்துதல், குரல், சமிக்ஞை என்பவற்றுக்கேற்ப வித்தியாசப்படுகின்றன. ஒரு ஆய்வாளரால் அனைத்துப் பிராந்தியங்களையும் உள்ளிட்ட முழுமையான ஓர் ஆய்வைச் செய்வது சிரமசாத்தியமானது.

குழந்தை வளர்ப்பில் மட்டுமல்ல பொது வாழ்விலும் பல வார்த்தைகள் புழக்கத்திற்கு வந்துள்ளன.'உலகம் உள்ளங்கையில் சுருங்கி விட்டது' என்பது உண்மைதான். ஆனால் யாருடைய உலகம் யாருடைய கையில் சுருங்கிவிட்டது என்று கேட்டுப்பாருங்கள். அமெரிக்காவின் உலகம் அமெரிக்கரின் கையில் சுருங்கிவிட்டது என்று பதில் வரும். உண்மையில் எம்முடைய உலகம் சுருங்கிவிட்டதா?! அல்லாஹ்வின் உலகம் விசாலமானது என்று அல்குர்ஆன் கூறுகின்றது. அவ்வாறே கல்வித் துறையில் 'அறிவு, திறன், மனப்பாங்கு ஆகியவற்றை வளர்ப்பதே கல்வியின் குறிக்கோள்' என்று கூறப்படுகிறது. இங்கு யாருடைய அறிவு, யாருக்குரிய திறன்,யாருடைய மனப்பாங்கு என்று கேட்டால் மேற்கத்திய அறிவு, மேற்கத்திய திறன், மேற்கத்திய மனப்பாங்கு என்பதாகப் பதில் வரும். ஆனால் உள்ளூர் அறிவு, நமது திறன், நமது மனப்பாங்குதான் இன்று நமக்குத் தேவையாகும். எமது அலுவலகங்களில் நிறுவனங்களில் அதன் அங்கத்தவர் புத்தாக்கச் சிந்தனைகளைக் கூறும் போதும் 'இது எமது நிறுவனத்தின் அரசியலுக்கு முரணானது: எமது வேலைத்திட்டத்துக்கு பொருந்தாது: இதற்கு எம்மால் உடன்பட முடியாது: இது பொதுவான கருத்தே குறிப்பானதல்ல: இன்ஷா அல்லாஹ் இதுபற்றி யோசிப்போம்: இதை எழுத்து மூலம் தாருங்கள்: இதற்கு குழு அமைப்போம்' போன்ற அபாயகரமான வார்த்தைகளால் புத்தாக்கச் சிந்தனைகள் கொலை செய்யப்படுகின்றன. இவ்வாறு ஐம்பதுக்கு மேற்பட்ட அபாயகரமான வார்த்தைகளுக்கு எழுதப்பட்ட குறிப்புக்கள் இரண்டாயிரத்திமூன்று அளவில் 'பைலோடு' தொலைந்து விட்டன. அவற்றில் எஞ்சியதே இவை. இதன் ஒளியச்சுக்கு உதவிய ஏ.எஸ்.பெரூஸ் அவர்களுக்கு எனது ஆழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அன்புடன்
**ஏ.பி.எம். இத்ரீஸ்**

# நீ டொக்டராக வேண்டும் அல்லது என்ஜினியராக வர வேண்டும்

தாய்மாரின் உச்ச பட்ச எதிர்பார்ப்பு தமது குழந்தை எதிர்காலத்தில் வைத்தியராக வரவேண்டும் அல்லது பொறியியலாளராக வரவேண்டும் என்பதுவே. இந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையில் ஒரு குழந்தை கடுமையாக உழைக்கலாம். இதனால் மிகச்சிறிய வயதிலிருந்தே இக்கருத்து வலியுறுத்தப்படுகிறது. அதற்காக குழந்தையின் முன்னிலையில் இந்த வார்த்தை திரும்பத் திரும்பக் கூறப்படுகிறது. இவ்விரு துறைகளின் பயன்களை எடுத்துக்கூறி ஆர்வமூட்டப்படுகின்றது. இவ்விரு துறைகளுக்கும் மக்கள் மத்தியில் உள்ள மதிப்பையும் இத்துறைகளைப் படிப்பதால் நல்ல வருமானம் ஈட்டலாம் எனவும் கூறப்படுகிறது. இந்த வார்த்தையில் அப்படி என்ன அபாயம் இருக்கிறது என்று நீங்கள் வினவக்கூடும். உண்மையில் ஒரு குழந்தை எதிர்காலத்தில் வைத்தியராக மாறுவதாலோ அல்லது பொறியியலாளராக ஆகுவதாலோ என்ன அபாயம் வந்து விடப்போகிறது என்று நீங்கள் கேட்கக்கூடும்.

இந்த வார்த்தையின் முதலாவது தவறு உயர்ந்த தொழிற்துறைகளை மருத்துவம், பொறியியல் என்ற இரு தொழில்துறைகளுக்குள் நாம் சுருக்கி விடுகின்றோம். ஏனைய துறைகள் இவை இரண்டையும் விடத் தாழ்ந்தவை எனக்கடுமையாக வலியுறுத்துகின்றோம். மருத்துவர்களின் முன்னால் மற்றத் தொழில்களில் ஈடுபடுகின்றவர்கள் அந்தஸ்துக் குறைந்தவர்கள் என்று இந்த வார்த்தைகள் மூலம் உணர்த்துகின்றோம். அனைவரையும் மருத்துவர்களாகவும் பொறியியலாளர்களாகவும் மாற்றுவது சாத்தியம் இல்லை என்று நம் புத்திக்குப் பட்டாலும் இவை இரண்டில் ஒன்றே எமது தெரிவாக இருக்கின்றது. அதாவது குழந்தை ஒன்றில் வைத்தியராக வேண்டும் அல்லது பொறியியலாளராக வேண்டும். ஆனால் குழந்தை இத்துறைகளில் ஒன்றில் சித்தியடைந்தால் பிரச்சினை தீர்ந்துவிடும். சித்தியடையாவிட்டால் வாழ்நாள் பூராக குழந்தை வருந்தவேண்டி ஏற்படும்.

இந்த வார்த்தையின் இரண்டாவது அபாயம் குழந்தைகளின் உண்மையான நாட்டத்தையும் ஈடுபாட்டையும் பொருட்படுத்தாமல் இவ்விரு துறைகளையும் அதன் ஆழ்மனத்தில் திணிக்கின்றோம். இது அவர்கள் இத்துறைகளைக் கற்கின்றபோது இடர்பட நேரிடுவதோடு தொழிலுக்கு வந்த பின்னும் பல்வேறு தவறுகளை இழைப்பர்.

எல்லாக் குழந்தைகளும் வைத்தியராக வேண்டும் என்ற தாயின் எதிர்பார்ப்பு குழந்தைகளின் உள்ளங்களைப் பாதிப்பதால் எல்லாக் குழந்தைகளும் இத்துறையில் முன்னுக்கு வரவேண்டும் என முடிவெடுத்து விடுவர். கல்வி தொடரும். மூத்தபிள்ளை பரீட்சையில் தோற்றால் அடுத்த முறையும் புதிதாகப் பரீட்சை எழுத வேண்டி ஏற்படும். நூற்றுக்குத் தொண்ணூறு வீதம் புள்ளிகள் எடுக்காவிட்டால் மருத்துவபீடம் நுழைய முடியாது. அந்தத் தடவையும் சித்தியடையாவிட்டால் இன்னும் இரண்டு வருடங்கள் நஷ்டத்தில் கழியும். இரண்டாவது பிள்ளையும் பரீட்சையில் தோற்காமல் இருப்பதற்காகவும் முதற்தடவையிலேயே சித்தியடைய வேண்டும் என்பதற்காகவும் தூரத்தில் உள்ள கல்லூரியொன்றுக்கு மருத்துவம் அல்லது பொறியியல் துறையில் கற்க அனுப்பப்படுவான். பிள்ளையின் பிரிவினால் தாய் இரண்டு விதமான கஷ்டங்களை அனுபவிக்கின்றாள். ஒன்று தனிமை. அடுத்தது மூத்த பிள்ளை வேறு துறைகளில் படிக்க வெட்கப்பட்டு வியாபாரத்தில் இறங்குவான். அல்லது பாஸ்போட் முடித்து வெளிநாடு சென்று உழைக்க முற்படுவான். ஏனைய குழந்தைகள் மருத்துவத்துக்கும் பொறியியலுக்கும் முயற்சித்துப்பார்த்து தோற்றுப்போவார்கள். ஆனால் குழந்தைகளின் விருப்பத்தெரிவிற்கும் அவர்களின் இயலுமைக்கும் ஏற்ப வழிகாட்டியிருந்தால் ஒவ்வொரு குழந்தையும் ஒவ்வொரு துறையில் முன்னேற்றம் அடைந்திருக்கும்.

இந்த வார்த்தையின் மூன்றாவது அபாயம் குழந்தைக்கும் அதன் வயதையொத்த சகபாடிகளுக்கும் இடையிலான சமூக உறவுகள் பாதிக்கப்படுவதாகும். மருத்துவராகவோ அல்லது பொறியியலாளராகவோ வரவேண்டும் என ஆர்வமூட்டப்படும் குழந்தை தன்தோழர்களுடன் கலந்து பழகமாட்டாது. அவர்களைப் புரிந்து கொள்ளவும் மாட்டாது. அவர்களின் செயல்பாடுகளில் பங்கேற்கவும் மாட்டாது. அந்த அளவுக்கு அக்குழந்தை தனது துறையில் பூரணமாக ஈடுபட்டிருக்கும். அதன் ஒட்டுமொத்தக் குறிக்கோளுமே மருத்துவராவதும் அல்லது பொறியியலாளராவதும் தான். இதனால் ஏனையோரின் சிந்திப்பு முறைமைகளை அறியாததாகவே வளரும். அவர்களின் உணர்வுகளை மதிக்கமாட்டாது.

ஆனால் எந்த ஒரு மனிதனும் பிறமனிதரின் தேவையின்றி தனது மருத்துவத்தாலும் விஞ்ஞானத்தாலும் தனித்து வாழ முடியாது. அவ்வாறு நினைப்பதும் அறிவுடமை ஆகாது. ஏனெனில் உலகம் நலன்களோடு பின்னிப்பிணைந்தது. சமூக சுபீட்சம் சும்மா வருவதில்லை. வெற்றி முன்னேற்றம் என்பதெல்லாம் நல்ல உறவுகளாலும் பலமான நட்பாலுமே சாதிக்கப்படுகிறது. வலுவான தொடர்புகளும் பரஸ்பர ஒத்துழைப்பும் நிபுணத்துவங்களும் பரிமாறப்படுவதிலேயே தனி மனிதனும் முன்னேற முடியும்.

நீ வைத்தியராக வேண்டும் அல்லது பொறியியலாளராக வேண்டும் என்ற வார்த்தை தனக்காக மட்டும் உழைக்க வேண்டும்; தனது நலனை மட்டும் கவனிக்க வேண்டும் என்ற சுயநல உணர்வை குழந்தையிடம் ஏற்படுத்துகிறது. சமூகத்தின் உதவியின்றி தனது எதிர்காலத்தை தானே தீர்மானிக்க வேண்டும் என்ற உணர்வை வளர்க்கின்றது. சுயநலமும் தன்னகங்காரமும் கொண்டதாக அக்குழந்தை உருவாகின்றது. ஏனைய வர்களின் மதிப்பையும் அங்கீகாரத்தையும் பெறுவதற்கு மருத்துவத்திலும் பொறியியலிலும் பரீட்சை எழுதினால் போதும் என்ற மனப்பாங்கை ஏற்படுத்துகின்றது. அப்போது வெற்றியும் புகழும் பெற்ற செல்வந்தனாக மாறிவிடலாம் என்று ஆசையூட்டப்படுகின்றது. மேலும் கூறுவதாயின் செயலூக்கம் உள்ள சுறுசுறுப்பான தனிமனிதனை உருவாக்கும் இந்த வார்த்தை கருணையுள்ள, மனிதர்களுக்கு உதவும் பரோபகாரியான மானிடனை அழித்துவிடுகின்றது. இந்த வார்த்தை நாதியற்றோருக்கு உதவும் நற்குணமுள்ள முஸ்லிமை உருவாக்குவதில்லை. மனித சமூகத்திற்கு சேவை செய்யும் முன்மாதிரி மு∴மினை உருவாக்குவதில்லை. ஆனால் ஒவ்வொரு முஸ்லிமும் தனக்கு முடியுமான அளவு சமூகத்தை முன்னேற்ற உழைக்கவேண்டும்.

அல்மஸ்ஊலியா என்ற நூலில் கலாநிதி அமீனுல் மிஸ்ரி கூறும்போது முகம்மத் (ஸல்) தனது தோழர்களை ஜாஹிலியத் என்ற சேற்றுக்குட்டையில் இருந்து களற்றி எடுத்து தனக்குத்தானே வாழாது தனது இறைவனின் கொள்கைக்காக, சகோதர மனிதர்களுக்காக வாழும் ஒப்பற்ற சமூகத்தை உருவாக்கினார்கள். ஆனால் இன்றைய நமது கல்வி முறை தனது நலன்களில் மட்டும் கவனம் செலுத்தும் சுயநலமிகளையே

உருவாக்குகின்றது. குழந்தைக்கு அதன் இளமைப் பருவத்திலேயே பாடசாலை சென்று படித்து டொக்டர் அல்லது என்ஜினியர் பட்டத்தைப்

பெறவேண்டும் என்றே சொல்லிக்கொடுக்கப் படுகின்றது. இவ்விரு துறைகளும் வாழ்க்கையை வளங்கொழிக்கச்செய்யும் வாழ்வின் வெற்றிப் படிகளைத் திறந்துவிடும் என்றும் போதிக்கப்படுகின்றது. தாயின் கவலையைப் போக்குவதற்காக குழந்தை அயராது பாடுபடுகின்றது. ஏனெனில் குழந்தை இந்தப்பட்டங்களைப் பெறாது விட்டால் அது தாய்க்கு கவலையை ஏற்படுத்திவிடும். அதனால் இச்சமூகத்திற்கு நேர்ந்துள்ள கதியைப்பற்றியோ இந்த கொள்கையை வாழவைப்பதற்காக நமது முன்னோர்கள் புரிந்த தியாகங்களையோ இக்குழந்தை கேள்விப்படுவதே இல்லை. அதற்கு மாறாக குழந்தையின் கண்ணும் காதும் கருத்தும் வாழ்க்கையை ஓட்டிச்செல்ல இப்பட்டங்களைப்பெறவேண்டும் என்பதிலேயே குறியாக இருக்கின்றது.

எனவே குழந்தை விரும்பும் கல்வித்துறையை தெரிவுசெய்ய விட்டுவிடுங்கள். அதற்கு நெருக்கடிகளை ஏற்படுத்தாதீர்கள். அதனுடைய விருப்பத்தேர்வில் நீங்கள் உதவி செய்ய விரும்பினால் அதன் ஆற்றலுக்கும் விருப்பத்திற்கும் ஏற்ப தெரிவு செய்ய உதவுங்கள் அல்லது மனித சமூகத்திற்குப் பயனளிக்கக்கூடிய அறிவுத்துறைகளைத் தெரிவுசெய்து கொடுங்கள்.

வெற்றி, பிரபல்யம், பணம்தான் உங்கள் நோக்கம் என்றால் குழந்தைக்கு இ∴லாமை கற்றுக்கொடுங்கள். நேர்த்தியைப் பழக்குங்கள். மனிதர்களை நேசிக்கச்செய்யுங்கள். மனிதர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுமாறு கூறுங்கள். எதிர்காலத்தில் உங்கள் குழந்தை வெற்றியாளனா, தோற்றுப்போனவனா என்பதை நடுவராக இருந்து தீர்ப்புச்சொல்லப்போவது சமூகமே என்பதை மறவாதீர்கள். 'தக்வா'வும் இறை உணர்வும் தான் எல்லாத்துறைகளிலும் மிகப்பெரும் பங்காளியாய் இருக்கின்றது. உங்கள் குழந்தை வாழ்வில் வெற்றி பெற வேண்டுமானால் இறை அருள் அதற்கு கிடைக்கவேண்டும். அது கிடைத்தால்தான் ஈருலகிலும் ஜெயம் பெறலாம்.

## உன்னை விட அவன் மேலானவன்

வளர்ந்து வரும் குழந்தையிடம் நற்பண்புகளையும் ஒழுக்க மாண்புகளையும் ஒவ்வொரு தாயும் பயிற்றுவிப்பாளனும் எதிர்பார்ப்பது இயல்பாகும். தமது குழந்தை பேரும் புகழும் அடைய வேண்டும் என்றுதான் அவர்கள் ஆசைப்படுவார்கள்.

ஆனால் இந்தக்குறிக்கோள் எந்தக்கடுமையான உழைப்புமின்றி மிக எளிதாக நிறை வேறுகிறது. அதுதான் "உன்னை விட அவன் மேலானவன்." இது பற்றி தேர்ச்சி பெற்ற பயிற்றுவிப்பாளர் கூறும் போது என்னுடைய இளமைப்பருவத்தில் என்னை உலுக்கிய சோதனைப்படுத்திய ஒரு வார்த்தை எனது தாய் எனக்கு நெருங்கிய ஒரு சகபாடியோடு ஒப்பிட்டு உன்னை விட அவன் மேலானவன் என்று கூறுவாள்.

ஓர் அனுபவசாலியான தாய் இப்படிக்கூறுகிறாள். ஒரு தடவை எனது குழந்தைக்கு இந்த வழிமுறையைப் பயன்படுத்த விரும்பினேன். அதற்காக இந்த வார்த்தையைப் பாவித்தேன். எமக்கு நெருங்கிய ஒரு பையனின் நற்பண்புகளைக் கூறி எனது பையனை மட்டம் தட்டினேன். பின்னர் அதை மறந்து விட்டேன். சில வருடங்களில் எனது மகன் என்னிடம் கேட்டான். உம்மா நான் உனது மகனாய் இருப்பதை கேவலமாய் நினைத்தாயா? அவனைப்போல என்னையும் மாற்றுவதற்கு ஆசைப்பட்டாய் தானே. ஏனென்றால் என்னிடம் இல்லாத பண்பு அவனிடம் இருந்ததால் அதற்கு அந்த தாய் தான் செய்த தவறை அந்த தருணத்தில் உணர்ந்திருக்கவில்லை என்று கூறினாள். இந்த வார்த்தையில் உள்ள அபாயத்தை நாம் அறியாமல் இருக்கக் கூடாது.

முதலாவது இந்த வார்த்தை சகபாடிகள், ஒத்த வயதினருக்கிடையே ஒரு வகையான போட்டியையும் பூசலையும் உருவாக்கும். குழந்தைகள் ஒருவருக்கொருவர் விரோதம் பாராட்டுவர். இறுதியில் இது பொறாமைக்கு இட்டுச்செல்லும்.

இந்த வார்த்தையை சகோதர, சகோதரிகள் மத்தியில் பாவிப்பதால் நிலமை இன்னும் மோசமாகிவிடும். எல்லா மனிதர்களிடமும் சுய கௌரவமும் தன்மான உணர்வும் உண்டு. ஆளுக்காள் இது வேறுபட்டாலும் இது இருக்கின்றது. தனது குழந்தையை விட மற்றக் குழந்தையை மேலாகக் கருதுவது ரோசத்தை ஏற்படுத்தி விடுகின்றது. இறுதியில் சகோதரர்களுக்கு மத்தியில் வெறுப்பையும் கோபத்தையும் உருவாக்குகின்றது. இது பற்றி கலாநிதி ஸ்போக் குறிப்பிடுவது இங்கு நோக்கத் தக்கது. "பெற்றோர் தமது பிள்ளைகளிடம் காணப்படும் நற்பண்புகளைப் பாராட்டி உற்சாகப்படுத்துவதை விடவும் அதிகமாக அவர்களை நிந்திக்கவும் திட்டவுமே செய்கின்றனர். குழந்தையின் சகோதர சகோதரிகளுக்கிடையில் ஒப்பீடுகள் செய்து சிக்கலை உருவாக்க முயற்சிக்கின்றனர். இதனால் தான் குழந்தைகளுக்கு மத்தியில் பொறாமை போட்டித்தன்மைகள் உருவாகின்றன. ஒப்பிடுவதால் தீவிர உணர்ச்சிகளுக்கு ஆளாகி சகோதரர்களுக்கிடையே சண்டைகள் ஏற்பட்டு இறுதியில் இளைய சகோதரனை தோல்வியுறச்செய்வதில் அல்லது அடிப்பதில் முடிகின்றது."

பொறாமை வளர்ந்து மனவெழுச்சிப் பிரச்சினையாக மாறினால் அதை தீர்ப்பது மிகவும் கஷ்டமாகும். அடுத்தவன் முன்னேறுவதை சகிக்காத ஒரு நோயாக அது குழந்தையைத் தொற்றிக்கொள்ளும். தன்னை மேம்பட்டவன் என்று சொல்லிக்கொள்வதற்காக ஏனையவர்களை மட்டந்தட்டுவதிலேயே காலத்தைக்கழிக்கும்.

பெரும்பாலும் தாய்மார் தமது குழந்தைகளை குறைத்து மதிப்பிடக் காரணம் மற்றக்குழந்தையைப் பற்றி நன்கு அறிந்திருப்பதுமில்லை. அவர்கள் அக்குழந்தையைக் குறிப்பிட்ட நேரம் அல்லது குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் மட்டுமே அறிந்திருப்பர். அப்போது அக்குழந்தை மிகச்சிறந்த முறையில் நடந்து கொண்டிருக்கும். ஆனால் அதன் எதார்த்தத்தை அறிந்திருக்க மாட்டார்கள். அக்குழந்தையின் ஆளுமையில், நடத்தையில் உள்ள பலவீனப்பண்பை பார்த்திருக்க மாட்டார்கள். எனவே அக்குழந்தையை 'மலக்' காகக்கருதி செயற்படத்தூண்டி விடுகிறது. தாயின் பேச்சைக்கேட்டு அக்குழந்தையை முன்மாதிரி மனிதனாக நினைத்து எல்லா விடயங்களிலும் பின்பற்ற ஆரம்பித்து விடுகிறது. அதன் மோசமான பண்புகளையும் பழக்கவழக்கங்களையும் கைக்கொண்டு விடுகிறது. இது குழந்தை வளர்ப்பில் பெரும் முரண்பாட்டையும் தவறையும் தோற்றுவித்துவிடும்.

தன்னை விட இன்னொருவன் மேலானவன் என்பதை ஒரு குழந்தை

உறுதியாக நம்பும் போது அதன் மன வலிமை குன்றி விடும். முன்னேற்றத்தை விரும்பாது சோம்பேறியாகிவிடும். மற்றக்குழந்தை உண்மையில் மேலானவராக மாறிவிடுவார். தன்னம்பிக்கையை இழந்த குழந்தை எல்லா மனிதர்களையும் தன்னை விட மேலானவர்கள் என்றே நினைக்க ஆரம்பித்துவிடும். இதனால் தாழ்வுச்சிக்கல் என்ற உள நோய்க்கு அக்குழந்தை ஆளாகிவிடும். இது பெரும் பாலானவர்களிடம் பரவலாகக்காணப்படும் நோய்க்குறியாகும். இத்தாழ்வுச்சிக்கல் ஏனையவர்களை எல்லா விடயங்களிலும் பின்தொடரும் நிலையை தோற்று வித்துவிடும். தன்னுடைய நடத்தையை விட குழந்தை அடுத்தவரின் நடத்தையை உயர்வாகக் கருதும். ஆனால் ஒருவரைக் கண்மூடி பின்பற்றல் இஸ்லாத்தில் வெறுக்கத்தக்கதாகும். 'உங்களில் யாரும் யாரையும் கண்மூடிப்பின்பற்ற வேண்டாம் நான் மனிதர்களுடன் இருக்கின்றேன். அவர்கள் சிறப்பாகச் செய்தால் நானும் சிறப்பாகச் செய்வேன். அவர்கள் மோசமாக நடந்தால் நானும் மோசமாக நடப்பேன் என்றும் கூறவேண்டாம். மக்கள் நல்ல முறையில் நடந்தால் நீங்களும் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். அவர்கள் மோசமாக நடந்தால் அதை விட்டும் தவிர்ந்து கொள்ளுங்கள்.' (திர்மிதி.)

தாய்மார்களே! நீங்கள் கடைப்பிடிக்க விரும்புகின்ற, உங்கள் குழந்தைகளுக்குப் போதிக்க விரும்புகின்ற எல்லா நற்பண்புகளும் ஒரு தனி மனிதனிடம் குவிந்து கிடப்பதில்லை. 'ஞானம் காணாமல் போன பொருள். அதைக் கண்ட இடத்தில் பெற்றுக்கொள்ள வேண்டும்.' (திர்மிதி)

எனவே இஸ்லாம் கூறும் பண்பாட்டையும் ஒழுக்க மாண்புகளையுமே குழந்தைக்கு கற்றுக்கொடுக்க வேண்டும். அவற்றைக் கடைப்பிடிக்கவே குழந்தையைத் தூண்ட வேண்டும். அதன் பின் அப்பண்பாடு இன்னொரு குழந்தையிடம் காணப்பட்டால் அது மேலும் விளங்கிச் செயற்படுத்துவதற்காக 'அந்த குழந்தையிடம் இந்தப்பண்பு இருக்கிறது.' என்றோ 'இந்த நற்பண்பை அவன் கடைப்பிடிக்கின்றான்' என்றோ உதாரணம் காட்டுவதில் தவறில்லை.

உன்னைவிட அவன் மேலானவன் என்ற வார்த்தை பொதுப்படையானது. அது குறிப்பாக எதையும் உணர்த்த வில்லை. பல் வேறு பொருள் மயக்கங்களுக்கு அது இடமளிக்கின்றது. இந்த வார்த்தைக்கு பொருள் தேடுவதில் ஈடுபடும் குழந்தை தன் கவனத்தை ஒருநிலைப்படுத்த முடியாது போகிறது. மேலானவன் என்றால் எதில் மேலானவன் எந்த விடயத்தில்

மேலானவன் என்ற தெளிவு இந்த வார்த்தையில் இல்லை. இது சில வேளை மோசமான பழக்க வழக்கங்களுக்கும் இட்டுச் செல்வதுண்டு விரல் சூப்புதல், நகம் கடித்தல் போன்ற பழக்கங்களை குழந்தை உடனடியாகப் பழகிக் கொள்கிறது. பின்னர் இப்பழக்கங்களை விடுவிப்பது மிகவும் கஸ்டமாகி விடும்.

இறுதியாக கலாநிதி ஸ்போக் அவர்களின் கருத்தைக் கூறி முடிக்கலாம் என நினைக்கின்றேன். அடுத்த மனிதனின் உள்ளத்தில் யாருக்கும் இல்லாத இடம் தனக்கு இருக்க வேண்டுமென ஒவ்வொரு மனிதனுக்கும் ஆசை இருக்கிறது. எமது அன்றாட வாழ்வில் இதற்கு ஏராளமான உதாணங்கள் இருக்கின்றன. வேலைத் தளத்தில் உள்ள உங்கள் முகாமையாளர் பின்வருமாறு கூறுகின்றார். நீங்களும் உங்கள் நண்பரும் அங்குள்ள ஊழியர்களில் மிகவும் தகுதியானவர்கள். எதிர் காலத்தில் நீங்கள் முன்னேறுவீர்கள் என்று நினைக்கின்றேன். இந்த வகைப் பாராட்டைக்கேட்டு நீங்கள் புளகாங்கிதம் அடைந்தால் அது பெரிய விடயம் அல்ல. உங்களுக்கு ஒரு போட்டியாளர் இருக்கிறார். ஏறத்தாள நீங்களும் அவரும் உங்கள் முகாமையாளரிடம் ஒரே அந்தஸ்தைத்தான் பெற்றுள்ளீர்கள். மாறாக உங்கள் முகாமையாளர் இப்படிக்கூறியிருந்தால் நான் உங்கள் உழைப்பை பாராட்டுகிறேன். நீங்கள் எதிர்காலத்தில் இதை விடச்சிறப்பாக செய்வீர்கள் என நம்புகிறேன். இந்தப்பாராட்டுக்குறித்து நீங்கள் மகிழ்ச்சியடைவது நியாயமானது. இவ்வாறு தான் குழந்தையின் நிலையும். குழந்தை தனது தரத்தில் இன்னொரு குழந்தை மதிக்கப்படுவதை வெறுக்கின்றது. அக்குழந்தையை இன்னொரு குழந்தையுடன் ஒப்பிடுவதும் அதைப்புகழுவதும் அதனிடம் இல்லாத சிறப்பம்சம் அக்குழந்தையிடம் இருப்பதாக கூறுவதும் தான் நாம் செய்யும் தவறாகும். ஏனெனில் ஒப்பிடுவதானது குழந்தையிடம் தொடச்சியான போட்டி மனப்பான்மை, மனக்கவலையையும் தோற்றுவித்துவிடுகின்றது. அக்குழந்தையின் சிறப்பம்சம் என்னவென்பதைக்கண்டறிய முற்படுகிறது. குழந்தையின் சகோதரர்களுக்கு மத்தியில் ஏற்றத்தாழ்வு உருவாகவும் தீவிர உணர்வையும் இவ்வொப்பீடு ஏற்படுத்தி விடுகிறது. எனவே பெற்றோர்களாகிய நாம் நமது குழந்தைகளுக்கு எது மிகப்பொருத்தம் என்பதை தீர்மானிப்பதில் மிகவும் நிதானமாகவும் அமைதியாகவும் நடந்து கொள்ள வேண்டும். எமது உண்மையான அன்பை அவர்களிடம் வெளிப்படுத்த வெண்டும். அவர்களின் நற்பண்பை மனம் திறந்து பாராட்ட வேண்டும். அவர்களின் தீய பண்பை அகற்றப் பொறுமையாக உழைக்க வேண்டும்.

# நீ சின்னப்பிள்ளை

பெற்றோர் தமது குழந்தைகள் சிறியவர்கள் என்பதால் அவர்களுக்கு எதுவும் தெரியாது, அவர்கள் எதனையும் திறம்படச்செய்ய மாட்டார்கள் என்றே நினைக்கிறார்கள். எனவேதான் எல்லா விடயங்களிலும் குழந்தைகளின் சுயத்துக்கு எதிராகப் பேசுகிறார்கள். இந்நம்பிக்கை குழந்தையின் நடத்தையோடு கலந்து விடுகின்றது. குழந்தை பயப்படும் போது உம்மாவை நோக்கி ஓடுகின்றது. சிக்கலில் மாட்டிக் கொள்ளும் போது ஆலோசனை கேட்கின்றது. நிலத்தில் விழுந்து கொண்டு பெற்றோரின் உதவியை நாடுகின்றது.

இந்தக் காரணங்கள் இயல்பானவை. ஆரோக்கியமானவை. ஆனால் “நீ இன்னும் சின்னப்பிள்ளை” என்ற வார்த்தை அபாயகரமான அதே நேரத்தில் உண்மையானதும்தான். ஆனால் அது தற்காலிக கட்டமாகும். அதை எப்போதும் பாவிக்கும் வார்த்தையாக எடுத்துக்கொள்ளக்கூடாது. குழந்தை உடனே சுதந்திரத்தை விரும்புகின்றது. தன்னில் தங்கிநிற்க ஆசைப்படுகின்றது. பெரியவர்கள் செய்வதைப்போல அது ஒரு செயலைச்செய்ய முயலும்போது அதற்கேற்ற மனத்தயாரிப்பைப் பெற்று விடுகிறது. உதாரணமாக தனது அறையை ஒழுங்குபடுத்த முயலும்போதும் அதில் கணிசமான வெற்றிகளை ஈட்டும்போதும் அதன் தன்னம்பிக்கை அதிகரிக்கின்றது. பாராட்டை எதிர்பார்க்கின்றது.

ஆனால் தாய் இந்த முயற்சியை நல்லதாகக் கருதுவதில்லை. அவள் உடன்பாடாகப் பார்ப்பதற்குப் பதிலாக எதிர்மறையாகவே நோக்குகின்றாள். உதாரணமாக குழந்தையைப் பார்த்து நீ கரிக்கோச்சு, ஆமைவேகம், நேர்த்தியில்லை, ஒழுங்கில்லை, இப்படியா சாமான்களை அடுக்குவது போன்ற வார்த்தைகளை உதிர்ப்பாள். இவை குழந்தையின் செயலுக்குத் தடைபோடுவதாக அல்லது பலவீனப்படுத்துவதாக அல்லது குறை கண்டுபிடிப்பதாக அமைந்துவிடும். குழந்தை தானாகச் செய்யும் காரியங்களை அவை எவ்வளவு மோசமாக இருந்தாலும் உற்சாகப்படுத்த

வேண்டுமென உளவியலாளர் கூறுகின்றனர். குழந்தையின் சுதந்திர நாட்டம் தற்காலிகமானவை. மிகக்குறைந்தளவு நேரமே இது நீடிக்கிறது. இதை தாழ்த்திப் பேசினால் இந்த உணர்வு தடைப்பட்டுவிடும். அல்லது அடியோடு அழிந்து விடும்.

இது பற்றி கலாநிதி ஸ்போக் குறிப்பிடும் போது " குழந்தை மேற்கொள்ள முடியுமான வேலையை நீங்கள் தடுக்க முயன்றால் அல்லது தேவைக்கதிகமாகத் தலையிட்டால் குழந்தையின் கோபம் தூண்டப்படும் அல்லது தான் மோசமான செயலைச்செய்கிறேன் என்ற குற்ற உணர்வு தூண்டப்படும் அல்லது குழந்தையின் வயதுக்கேற்ற விடயங்களை கற்றுக்கொள்வதற்காக அதற்கு வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுக்க தாமதப்படுத்தினால் குழந்தையின் கவனத்தை அது இழக்கச் செய்வதோடு, அதன் செயலூக்கத்தையும் குன்றச்செய்து விடும். அவ்வாறே குழந்தை முழுமையாக அக்காரியத்தில் ஈடுபடுவதற்கு நீங்கள் விட்டு விட்டு அதற்கு மொத்தமாக நீங்கள் உதவாமல் இருந்தால் அது தனது ஆடையை அணிவதற்குக்கூட கற்றுக்கொள்ள மாட்டாது. இந்த தோல்வி குழந்தையின் மன உறுதியை தளர்த்தி விடும். எனவே குழந்தைக்கு முடியுமான வேலைகளைச் செய்வதற்கு உங்கள் பூரண ஒத்துழைப்பை வழங்குங்கள் என்று கேட்கிறார் ஸ்போக்.

இவ்வாறு தாய் தனது குழந்தையை ஊக்குவிக்க வேண்டும். அதன் தவறைத் திருத்த வேண்டும். சிறப்பாக அக்காரியத்தைச் செய்வதற்கு அதனைத் தூண்ட வேண்டும். குழந்தை விரும்பக்கூடிய, அதன் வயதுக்கேற்ற அதற்கு முடியுமான எந்த முயற்சியிலும் தான் உதவுவதற்கான சந்தர்ப்பத்தை அதற்கு வழங்க வேண்டும். குழந்தையின் கடமைகளைச் செய்வதற்கான மிகச்சரியான, இலகுவான, விரைவான வழி முறையை தாய் அதற்கு கற்பிக்க வேண்டும். குழந்தை தவறு விடும் போது தாய் பொறுமையைக் கையாள வேண்டும். அதன் முயற்சிகளைப் பாராட்ட வேண்டும். அது எதிர் கொள்ளும் கஷ்டங்களை இலகுபடுத்திக்கொடுக்க வேண்டும். இவையாவும் குழந்தையின் கட்டமைப்பையும் இருப்பையும் அதற்கு உணர்த்தக் கூடியவையாகும். அப்போது குழந்தை தனது கடமைகளையும் பொறுப்புக்களையும் சரிவரப் புரிந்து கொள்ளும். குழந்தைக்கென உரிய பிரத்தியேக விடயங்களில் தாய் ஆலோசனை கூறுவதில் எவ்வித தடையுமில்லை. குழந்தை சரியாக செய்யலாம், அல்லது பிழை விடலாம். ஈற்றில் அது நிச்சயமாக வெற்றி வாகை சூடும்.

தாய் இவ்வாறு செய்யாவிட்டால் குழந்தை மறைவாக சில முயற்சிகளில் ஈடுபட்டு எதிர்பாராத விளைவுகளுக்கு அல்லது விபத்துக்களுக்கு கூட ஆளாகலாம். வாழ்கையின் கஷ்டங்களிலிருந்து குழந்தையை விடுவிக்க வேண்டும் என்று தாய் நினைத்தால் நீ இன்னும் சின்னப்பிள்ளை என்ற வார்த்தை குறிப்பிட்ட காலப்பகுதிற்கு ஓர் கோட்பாடாக ஆக்கும் நிலைக்குத் தூண்டலாம். ஆனால் இந்த எண்ணம், அந்த வார்த்தையின் அபாயத்தன்மைகளை குறைத்துவிடப்போவதில்லை. வேறு சில விளைவுகளும் இதனால் ஏற்படும். செல்லப்பிள்ளைகள் இந்த வார்த்தையை விரும்புவார்கள். அதற்கு தங்களைப் பழக்கப்படுத்திக் கொள்வார்கள். இந்த வார்த்தையை திரும்பத் திரும்பக் கூறுவதால் மகிழ்ச்சியடைவார்கள். ஏனையவர்கள் தன்னில் தங்கி நிற்பதன் குறைகளை வெளிப்படுத்துவார்கள். முதலாவது அவர்களுக்கு சோம்பல், ஓய்வு விருப்பை இது கொடுக்கும் இரண்டாவது களைப்பு, சீரியசெயலை எச்சரிக்கும். எனவே இக்குழந்தைகள் பெற்றோரை தங்கி நிற்பார்கள். பின்பு சமுகத்தை நோக்கிப் புறப்படும் போது தமது அனுபவக்குறைவால் சிறிய தடைகளையும் துன்பங்களையும் கண்டு பதறுவர். மக்களுடன் பிரச்சினைகளை அணுகத்தெரியாது தடுமாறுவார்கள். துன்பங்களும் சோதனைகளும் அதிகரிக்கும் போது அவர்களின் ஆளுமையின்மையால் அவற்றை சமாளிக்க முடியாத போது தோல்வியும் தனிமைப்படலுமே ஏற்படும்.

இன்னும் சின்னப்பிள்ளை தான் என்ற வார்த்தையை குழந்தை தான் விரும்புவதையெல்லாம் அடைவதற்கு பயன்படுத்த தொடங்கிவிடும். அப்போது எந்த கணக்கு வழக்குமின்றி குழந்தைக்கு அன்பு காட்டப்படுகின்றது. அதன் கோரிக்கைகள் நிறைவேற்றப்படுகின்றன. எனவே குழந்தை இளமையிலேயே செருக்குடனும் சுயநலத்துடனும் வளர ஆரம்பிக்கும். முழுக்கவனிப்பினையும் பராமரிப்பினையும் தனக்கு அளிக்க வேண்டும் எனப் பெற்றோரிடம் எதிர் பார்க்கும். ஆனால் அக்குழந்தை வாழ்க்கையோடு என்றோ ஒரு நாள் மோத வேண்டி வரும். அது அனுபவித்த சொகுசுகளை இழக்க நேரிடலாம். அப்போது குழந்தையின் மனமும் உடைந்து பெருமைக்குணமும் உடையலாம். மற்றக் குழந்தையைப் போல தனது குழந்தையும் நடந்து கொள்வதைப் பார்க்கும் தாய் சின்னப்பிள்ளையாய் இருப்பதால் அதன் நடத்தைகளைத் திருத்தாது விட்டுவிடுகிறாள். சமூகப்பழக்க வழக்கங்களை அக்குழந்தைக்கு அவள் கற்பிப்பதில்லை. அவளுடைய குழந்தை சின்னப்பிள்ளை என்பதால் அதனைப் பயிற்றுவிக்கவோ வழிகாட்டவோ முற்படுவதில்லை. (இந்த நம்பிக்கை தவறானது. குழந்தைப் பருவத்திலிருந்து பயிற்றுவித்தல்

ஆரம்பமாகின்றது. குழந்தைக்கு விளங்கும், செயலாற்றும் ஆற்றல் இருக்கின்றது.) இந்த விடயம் இறுதியில் குழந்தை பெரிய வயதில் தவறிழைக்கவும் அத்து மீறலில் ஈடுபடவும் வாய்ப்பு ஏற்படுத்தி கொடுக்கின்றது.

எனது குழந்தை சின்னப்பிள்ளை என்று தாய் இளக்காரமாகக் கருதுவதால் இறைவனுக்குச் செலுத்த வேண்டிய உரிமைகளிலும் பொடுபோக்காக நடந்து கொள்ளக் கூடிய நிலமையை உருவாக்கும். இறைவனின் ஏவல் விலக்கல்களை குழந்தைக்கு கற்பிக்கவோ பயிற்றுவிக்கவோ முடியாது போகும். இஸ்லாமிய சட்டப்பொறுப்புக்களை ஏற்படுத்துவதற்கு குழந்தைகள் மீது கடமையில்லை என்றொரு பொது விதி இருப்பதும் நோக்கத்தக்கது. ஆனால் அவற்றைப் பழக்கத்திற்கு கொண்டு வருவதன் மூலம் பயிற்றுவிக்கலாம். இல்லாவிட்டால் தொழுகை போன்ற கடமைகளைப் பத்து வயதிற்குப் பிறகும் குழந்தை புறக்கணிக்கலாம். இதனால் தான் குழந்தைகள் பலவீனமான ஈமானோடும் இஸ்லாத்தில் பற்றற்றவர்களாகவும் உருவாகின்றனர். இவர்கள் பெரியவர்களான பிறகு சீர் திருத்துவது நடவாத காரியம். நாற்பது வயது பிந்தினால் திருத்த முடியாது என்று கூறுவதற்கு இது தான் காரணம். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? நீ சின்னப்பிள்ளை என்பது மூன்று வார்த்தைகள் கொண்ட வாக்கியம்தான். ஆனால், அது ஏற்படுத்தும் பாதிப்பு மிகப் பாரியது. ஒவ்வொரு பாதிப்பையும் நீக்க பல ஆண்டுகள் செல்லலாம்.

## விளையாடுவதை விட்டுவிடு நீ பெரியவனாகி விட்டாய்

கட்டிளமைப் பருவத்தை நெருங்கிய குழந்தைகள் ஏதாவது விளையாட்டிலீடுபடுவது தாய்மாருக்கு பெரும் கவலையாகும். குழந்தைகளின் வயதுக்கேற்ற விளையாட்டுக்கள் இருந்தாலும் தாய் தனது குழந்தைகள் பெரியவர்களாகி விட்டார்கள். பெரியவர்கள் ஒருபோதும் விளையாடுவதில்லை என்று நினைக்கின்றாள். சிறிய விளையாட்டு உபகரணத்தைக்கொண்டு தனது குழந்தை விளையாடினால், 'விளையாட்டை விடு நீ பெரியவனாகி விட்டாய்' என்று அதட்டிப் பேசுகிறாள். அவ்வாறே தனது பெண் குழந்தை தான் முன்பு விளையாடியதைப் போல பொம்மையை இடுக்கிக் கொண்டு விளையாட ஆரம்பித்தால் அவளைப் பார்த்து கேலியாகச் சிரிக்கிறாள். விளையாட்டுப்பொருட்கள் விற்கும் கடையில் அவளது மகன் ஒரு விளையாட்டு துப்பாக்கியையோ கத்தியையோ வாங்கி விளையாட ஆசைப்பட்டால் தாயும் தந்தையும் அவனைப் பரிகசிக்கின்றனர். விளையாடும் காலம் போய்விட்டது. இப்போது சீரியஸாக வேலை செய்யும் காலம் வந்து விட்டது என்று கூறுகின்றனர். விளையாட்டு என்பது குழந்தைப் பருவத்திற்கு மட்டும் உரியது என்பதே எமது கண்ணோட்டமாகும். ஆனால் இது தவறானது. இதனாலேயே இந்த வார்த்தை அபாயகரமானதாக மாறுகின்றது.

முதலாவது இந்த வார்த்தையை திரும்பத்திரும்பக் கூறுவது குழந்தைக்கு குழப்பத்தை ஏற்படுத்துகிறது. பெற்றோரின் திருப்தியைப் பெறவேண்டுமானால் விளையாட்டின் அத்தனை வகைகளையும் மொத்தமாக விட்டொதுங்க வேண்டும் என்ற எண்ணத்தைப் பிள்ளையிடம் தோற்றுவிக்கின்றது. ஆனால் இது முடியாத காரியமாகும். இந்த முடிவும் ஏற்கக் கூடியதல்ல. பொதுவாக மனிதன் அசைவு, இயக்கம், ஓய்வு என்ற அடிப்படைத்தேவைகள் கொண்டவன். இது குழந்தையைப்பொறுத்த வரையில் விளையாட்டின் மூலமாகவே சாத்தியமாகும்.

இயற்கை மார்க்கமான இஸ்லாம் பெரியவர்களுக்கு ஓய்வையும் விளையாட்டையும் அனுமதித்திருக்கும் போது குழந்தைகளுக்கு எப்படி தடைசெய்ய முடியும். பருவ வயதை அடையாத குழந்தைகள் பெரியவர்களான பின் என்ன செய்வது?!

அலி (ரழி) அவர்கள் கூறுகின்றார்கள் நேரத்திற்கு நேரம் உள்ளங்களுக்கு ஓய்வு கொடுங்கள். ஏனெனில் உள்ளங்களை நிர்ப்பந்தித்தால் அவை குருடாகி விடுகின்றன. நபி (ஸல்) அவர்கள் தனது தோழர்களுக்கு ஓய்வையும் விளையாட்டையும் ஆகுமாக்கினார்கள். அவர்களில் பலர் அறிஞர்களாகவும் நிருவாகிகளாகவும் வஹி எழுதுவோர்களாகவும் இருந்தனர். இமாம் புகாரி பின்வரும் ஹதீஸை பதிவு செய்துள்ளார். நபித்தோழர்கள் பூசனிக்காயை நோக்கி அம்பெய்து விளையாடினார்கள். இது உண்மை எனில் பெரியமனிதர்கள் இப்படி விளையாடலாமா என்ற கேள்வி எழுகிறது. அவ்வாறே நபித்தோழர்கள் ஓட்டப்போட்டி நடாத்தினார்கள். ம.்.ரிப் தொழுகையின் பின் அம்பெறிந்து விளையாடுவது வழக்கமாக இருந்தது. நபிகளார் பல தடவை மல்யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். நபிகள் காலத்தில் நிருவாக முறையைப்பற்றி எழுதும் இமாம் கத்தானி விளையாட்டுக்கு தனியான அமைச்சு இருந்ததாக கூறுகின்றார். அந்த விளையாட்டுக் குழு பருவகாலங்களுக்கேற்ப விளையாட்டுப் போட்டிகளை நடாத்துவார்கள் நபிகளாரும் அவரது மனைவியும் அங்குரார்ப்பணம் செய்து வைப்பார்கள் என்று கூறுகிறார்.

இஸ்லாமிய சட்ட அறிஞர்கள் உடலுக்கும் அறிவுக்கும் ஆன்மாவுக்கும் பயனளிக்கும் விளையாட்டுக்களை அனுமதித்துள்ளனர். செஸ் விளையாட்டைக்கூட நிபந்தனைகளுடன் அனுமதித்துள்ளனர். அக்காலத்தில் உலகின் முன்னோடி செஸ் பலகை, காய் வடிவமைப்பாளர்களாக முஸ்லிம்களே இருந்தனர். எனவே விளையாட்டு, ஓய்வு என்பது ஆண்மைக்கு இழுக்கானது அல்ல. ஒரு முஸ்லிம் மகிழ்வாகவும் விகடமாகவும் நடந்து கொள்வது குறைபாடன்று. பெரியவர்களை விட குழந்தை - அது பருவம் அடைந்தாலும் அதை நெருங்கினாலும் - அதிகமாக விளையாடும் இயல்பு கொண்டது. அழகிய முன்மாதிரியும் மிகப்பெரும் பயிற்றுவிப்பாளருமான நபிகள் கூட தனது பேரப்பிள்ளைகளுடனும் தோழர்களின் குழந்தைகளுடனும் விளையாடியுள்ளார்கள். குழந்தைகளோடு மகிழ்ச்சியாகப் பொழுதைக் கழித்துள்ளார்கள். அவர்கள் தான் 'உங்கள் குழந்தைகளுக்கு நீச்சலையும் அம்பெய்வதையும் கற்றுக்கொடுங்கள்' என்று கூறியுள்ளார். பெரிய

குழந்தை விளையாட விரும்பினால் அதனை எந்த இடையூறும் செய்யாமல் நாம் விளையாட அனுமதித்து விட வேண்டும். ஆகுமான பொழுதுபோக்கு ஓய்வு போன்றவற்றில் அதன் ஆற்றலைப்பயன்படுத்த வேண்டும். குழந்தை ஹராமான காரியத்தில் ஈடுபடவில்லை. விளையாட்டு மனதுக்கு இதமூட்டுகிறது. உடலுக்கு புத்துணர்ச்சியைக் கொடுக்கின்றது. இழந்த சக்தியை மீளப்பெறவும் சோம்பலையும் அயர்ச்சியையும் போக்கவும் உதவுகிறது. விளையாட்டு உடலுக்கு பயனளிக்கின்றது. உடல் உறுப்புக்களை பலப்படுத்துகின்றது. அவ்வாறே சில விளையாட்டுக்கள் மூளை சுறுசுறுப்பாக இயங்கவும் உதவுகின்றது. விளையாட்டினால் குழந்தை சில திறன்களையும் கற்றுக்கொள்கின்றது. எனவே விளையாடாமல் தடுப்பது இந்தப்பயன்களை விட்டுத்தடுப்பதாக அமையும்.

இந்த வார்த்தையின் மற்றொரு அபாயம் என்னவெனில் குழந்தையின் விளையாட்டு ஆர்வத்தை இவ்வார்த்தை அழித்து விடுவதில்லை. குழந்தையிடம் இயல்பாக காணப்படும் விளையாட்டு ஆர்வத்திற்கு இவ்வார்த்தை தடைபோடவும் முடியாது. குழந்தை பெரியவனாகிவிட்டான் என்று அவனை திரும்பச்செய்வதும் இல்லை. இந்த ஆசையை அடக்கும் போது குழந்தைக்கு தர்மசங்கடத்தையும் மன வேதனையையும் ஏற்படுத்துகின்றோம். விமர்சன, பரிகாச வார்த்தைகளைக்கேட்டு குழந்தை பயத்தினால் விளையாட்டைவிட்டும் தூரமாகின்றது. இது வரவேற்கத்தக்கதல்ல. இங்கு குழந்தையின் மனதில் உள்ள ஆசை நிறைவு செய்யப்படாமல் அடக்கப்படுகின்றது. குழந்தைப்பருவத்தின் பிந்திய காலப்பிரிவு சரியாகப்பூர்த்தி செய்யப்படாமல் குழந்தை வளர்ந்து பெரியவனாகி தந்தையுமாகி விடுவார். ஆனால் ஆசை அப்படியே மனதில் அடக்கி வைக்கப்பட்டிருக்கும். அவருக்கு சந்தர்ப்பம் கிடைக்குமானால் அல்லது அவருக்கேற்ற சூழ்நிலை அமையுமானால் அடக்கப்பட்ட ஆசை வெளிப்படும். தன்னை மறந்து விளையாட்டின்பால் உந்தித்தள்ளப்படுவார். அடக்கப்பட்ட ஆசையை நிறைவேற்றுவதில் தன்னுணர்வின்றி குழந்தைத்தனமான முறையில் ஈடுபடுவார். ஒரு பெரிய மனிதரிடமிருந்து விளையாட்டு ஆசை வெளிப்படுவதால் அவரது நடவடிக்கைகள் வேடிக்கைக்குரியதாகவும் விநோதமாகவும் இருக்கும்.

அப்படியானால் நாம் ஏன் இந்த இறை நியதிக்கு முரணாக செயற்படவேண்டும்?! இறைவன் மனிதனை குழந்தையாக பின்னர் வாலிபனாக பின்னர் பூரணம் பெற்ற மனிதனாகப் படைத்துள்ளான். இந்த வளர்ச்சியோடு ஏன் நாம் ஒத்துச்செல்லக்கூடாது. குழந்தை தனது

வாழ்வின் பல்வேறு கட்டங்களில் உள்ள விளையாட்டு இன்பங்களை அனுபவிப்பதற்கு ஏன் விட்டு விடக்கூடாது. ஒவ்வொன்றும் அதற்குரிய கட்டத்தில் நிகழ்ந்தே தீரும் என்பதை நாம் நன்கு அறிந்திருந்தும் பெரியவனாவதற்கு முன்னால் அவசரப்பட்டு குழந்தையை ஏன் தடுக்க வேண்டும்?! எல்லாக்குழந்தைகளும் இந்த மாற்றங்களைத்தாண்டி ஒவ்வொறு கட்டத்தையும் தானாகக் கடந்து தான் இறுதியில் பெரிய மனிதர்களாக மாறுகின்றனர்.

இந்த மாற்றம் அல்லது நகர்வுக்கட்டம் தனியாள் வேறுபாட்டிற்கு உற்பட்டது. இதனால்தான் குழந்தையின் விளையாட்டுப்பருவம் நீண்டதாக காணப்படுகிறது. இது இயற்கையானது. எல்லோருக்கும் பொதுவானது. பெரியவர் ஒருவர் விளையாட்டுக் கார் ஒன்றை உருட்டி விளையாடுகிறார் என்றால் அதற்காக நாம் கவலைப்படக்கூடாது. அமைதி இழந்துவிடக்கூடாது. குழந்தையும் இயல்பாக தனது வயதுக்குப் பொருத்தமான விளையாட்டுக்களில் ஈடுபடுகின்றது. பெரியவனாகும் போது படிப்படியாக விளையாட்டுக் குறைந்து சீரியஸ்ஸாக செயற்படக் கூடிய நிலை உருவாகின்றது. வளர்ந்து பெரியவனாகும் போது எந்த வழிகாட்டலும் இல்லாமல் குழந்தை விட்டு விடுகின்றது. தனது சக்திக்கும் சிந்தனை வளர்ச்சிக்கும் பொருத்தமான விளையாட்டுக்களையே பொழுது போக்காக தெரிவு செய்கின்றது. இதனால் தான் விளையாட்டு வடிவங்கள், வகைகள் இந்த வளர்ச்சிப் பொருத்தப் பாட்டுக்கேற்ப வித்தியாசப் படுகின்றது.

இந்த வளர்ச்சியின் தொடர்ச்சியாக ஒரு பிள்ளை குழந்தைப் பருவத்து விளையாட்டுக்களை மொத்தமாக விட்டு விடுகின்றது. அதற்குப் பிறகு ஓய்வை மட்டும் நாடுகின்றது. காலம் செல்லச் செல்ல தனது பொறுப்புக்களை உணர்ந்து நேரத்தை ஒழுங்கு படுத்திக் கொள்கின்றது. தனது வேலைகளையும் கடமைகளையும் முடித்த பிறகு குறிப்பிட்டளவு நேரம் பொழுது போக்கில் ஈடுபடுகின்றது. அதுவும் வளர்ந்தவர்கள் பொழுது போக்கில் ஈடுபடுவதைப் போல் அல்ல.

இதற்கு தனது அயல் வீட்டுத்தோழிகளோடு விளையாடிய ஆயிஷா (ரழி) அவர்களிடம் நமக்கு நல்ல முன்மாதிரி இருக்கின்றது. ஆயிஷா அவர்கள் அநாதைச் சிறுமியல்ல. திருமணம் முடித்த பல பொறுப்புக்களைக் கொண்ட குடும்பப் பெண். அதே நேரம் ஆயிஷா விளையாடியதை நபிகளார் ஒருபோதும் குறை கூறியதில்லை. தன்

ஆவல் தீருமட்டும் விளையாட அனுமதித்தார்கள். அவரது விளையாட்டினை உற்சாகப் படுத்தினார்கள். இதைப்பற்றி ஆயிஷா கூறும் போது நபிகளாரின் வீட்டில் நான் சிறுமிகளுடன் விளையாடிக் கொண்டிருந்தேன். அவை துணியால் செய்யப்பட்ட பொம்மைகள். என்னோடு விளையாடுவதற்கு தோழிகளும் இருந்தனர். நபிகளார் வீட்டுக்குள் நுழைந்தால் திரைச்சீலைக்குப் பின்னால் மறைந்து நண்பிகள் என்னோடு விளையாடுவதற்கு அப்பொம்மைகளை திருப்பி எடுத்துக் கொடுப்பார்கள் (புகாரி, முஸ்லிம்)

மனிதனிடம் காணப்படும் விளையாட்டின் மீதான இயல்பான ஆசையைப் பூர்த்தி செய்வதில் கவனம் செலுத்த வேண்டும் என்பதனை மேற்குறித்த சம்பவம் உணர்த்தி நிற்கின்றது. விளையாட்டு என்பது பயனற்ற தேவையல்லாத விடயமல்ல. ஒவ்வொரு மனிதனும் அனுபவிக்கும் உரிமையாகும். குழந்தைப்பருவமும் அதைத் தொடர்ந்து வரும் பருவங்களும் இதன் பயனை அனுபவிக்கின்றன. இது வரையறுக்கப்பட்ட ஒரு காலப் பிரிவே. இது மனித வாழ்க்கையில் மீண்டும் வருவதில்லை. எனவே குழந்தைகள் தங்கள் ஆசைகளை, தேவைகளை நிறைவேற்றப் பூரணமாக அனுமதியுங்கள். விளையாடுவதை விட்டு விடு நீ பெரியவனாகி விட்டாய் என்று திருப்பித் திருப்பி கூறி குழந்தைப் பருவத்தில் கிட்டும் அரிய சந்தர்ப்பத்தை பறிக்காதீர்கள்.

# எனதுபிள்ளையை என்னால் கட்டுப்படுத்தவே முடியவில்லை

இதைப்பற்றி உளவியல் ஆய்வாளர் ஆபிதா அல்முஅய்யத் கூறும் போது எனது பிள்ளையை என்னால் கட்டுப்படுத்தவே முடியவில்லை என்ற வார்த்தையைப் பல தடவைகள் நான் கேட்டிருக்கிறேன். தனது ஆளுமையை உறுதி செய்வதற்காக தன்னை வெளிப்படுத்திக் கொள்வதற்காக முயற்சிக்கின்ற பிடிவாதக் குழந்தையின் தாய் கூறும் வார்த்தைதான் இது. அத்தாயுடன் உரையாடி அவருக்கு உதவி செய்ய முயன்ற போது அவள் தனது குழந்தை இன்னும் ஏழு வயதைத் தாண்டவில்லை எனக் கூறினாள் அப்போது அக்குழந்தை தாயின் இந்த முறைப்பாட்டை கேட்டு பெருமிதத்தோடு பின்னால் நின்று கொண்டிருந்தது. இன்னும் பல சித்து விளையாட்டுக்களை அது செய்தது. போதாதற்கு தனது கையை நீட்டி தாயை அச்சுறுத்துகிறது. இதை விட இன்னும் செய்வேன் என்பது போல் அது இருந்தது. தாய் கலக்கத்துடன் காணப்பட்டாள். இவனோடு என்ன செய்வதென்றே எனக்குத் தெரியவில்லை. என்னுடைய சீவன் போய் விட்டது. இவனைத் திருத்தவே முடியாது என்று அத்தாய் கூறினாள்.

இக்காட்சி உங்கள் கண்ணுக்குத் திரும்பத் திரும்பவரும். பிடிவாதக் குழந்தைகள் பற்றி தாய்மார் முறையிடுவதனை நாம் பல வீடுகளிலும் பார்க்கலாம். அவர்கள் இப்படிச் சொல்வார்கள்: இந்தத் தலை முறை சரியான வித்தியாசம், இவர்களைத் திருத்துவது கஷ்டம், சரியான பிடிவாதக் காரர்கள், இவர்களைக் கட்டுப்படுத்தவே முடியாது என்றோ அல்லது இந்தத் தலைமுறை சரியான புத்திக் கூர்மை, லேசில கட்டுப் படுத்த முடியாது என்றோ தாய் தனது குழந்தை சனியன் பிடிச்சது, குட்டிச் ஷெய்த்தான், அடங்காப் பிடாரி போன்ற அடை மொழிகளைப் பாவிப்பதைக் கேட்கலாம். இது தாயின் தலைமைத்துவத்தை குழந்தை ஏற்கவில்லை என்பதை எடுத்துக் காட்டுவதாகவே அமைந்துள்ளது. இந்த வார்த்தையின் அபாயம் என்ன என்பதனை நோக்குவோம். இந்த வார்த்தைகள் குழந்தையின் முன்னிலையில் அல்லது அதன் காதில்

படுமாறே கூறப்படுகின்றது. ஏனையவர்கள் எமது வீரப்பிரதாபங்களைப் பற்றி பேசுகிறார்கள். பிறரின் கவனத்தை நாம் ஈர்த்து விட்டோம் எனக் குழந்தை இந்த வார்த்தைகளைக் கேட்டு மகிழ்ச்சி அடைகின்றது. சபையோர்அங்கீகாரம் கிடைத்து விட்ட பெருமிதம் அவர்களுக்கு உண்டு. இப்பெருமித உணர்வு அவர்களை தவறு செய்யத்தூண்டுகிறது. அவர்களுக்கு தவறு செய்வதற்கு நாம் அனுமதி அளித்து விட்டதாக நினைக்கிறார்கள் இந்த நடத்தையை தொடர்ந்து கைக் கொள்வதற்கு நமது வார்த்தை காரணமாகின்றது. எனது பிள்ளையை என்னால் கட்டுப்படுத்தவே முடியவில்லை என்ற வார்த்தையை குழந்தை புகழ் வார்த்தை எனக் கருதி சந்தோசப் பட்டுக் கொள்கிறது. இன்னும் அதிகமாக அத்துமீறலில் ஈடுபட முனைகிறது.

அறிவார்ந்த பெற்றோரை இயலாமலாக்கக் கூடிய, அவர்களை முறையிடும் நிலைக்கு ஆளாக்கிய குழந்தையை எப்படிப் புகழாமல் இருக்க முடியும்? அதற்குப் பின் குழந்தை அதிகளவு அத்து மீறுவதாகவும் தொந்தரவு தருவதாகவும் மாறும். பிறரின் கவனம் தன் மீது விழுவதற்காக குழந்தை புதுப்புது வழிமுறைகளை கையாளத் தொடங்கும். குழந்தை இயல்பிலேயே தன்னைக் கட்டுப்படுத்தி நெறிப்படுத்தும் அதிகாரத்தை எதிர்பார்க்கின்றது. நெறிமுறையற்ற சுதந்திரம் குழந்தையைப் பாதிக்கவே செய்யும். அதைக் கவலைக்குள்ளாக்கி அதனிடம் பதற்றத்தை ஏற்படுத்தும். உறுதியான சீரிய வளர்ப்பு முறையை குழந்தை இழக்க நேரிடும். நன்மை தீமை, ஹராம், ஹலால் பற்றிய அறிவே அதற்கு கிடைக்காது போகும். இதுபற்றி கலாநிதி ஸ்போக் கூறும் போது “குழந்தை வலுவுள்ள தந்தையையும் கண்டிப்பான தாயையும் எதிர்பார்க்கின்றது. பெற்றோர் உறுதியற்றிருப்பதைப் பார்த்து தான் பெருமைப்பட்டுக் கொள்வதை குழந்தை விரும்புவதில்லை. பெற்றோருடன் கடினமாக நடந்து கொள்வது நல்லதல்ல என்பதை குழந்தை அறிந்துதான் வைத்திருக்கின்றது. இந்த நடத்தைக்கு தந்தையோ தாயோ எல்லை போட வேண்டுமென எதிர்பார்க்கின்றது. தனது பிழையான நடத்தையைத் திருத்த வேண்டு மென்பதற்காகத்தான் அது வன்முறையில் ஈடுபடுகின்றது. தவறு செய்யும் போது ‘செய்ய வேண்டாம்’ என்று நாம் அன்பாகச் சொல்ல வேண்டும் என குழந்தை எதிர்பார்க்கின்றது” என்று கூறுகிறார்.

கட்டுப்படுத்தும் அதிகாரம் மனிதனுக்கு தேவையாயிருந்த போதும் அத்து மீறுவது மனிதனின் அடிப்படைப் பண்பாகும். குழந்தைகள் பெற்றோருடன் மிக நெருக்கமாக வாழ்வதால் எதிரும் புதிருமாக செயல்படுவது

இயல்பானது என உளவியலாளர்கள் கூறுகின்றனர். அப்போது குழந்தைகள் சுதந்திரத்தை எதிர்பார்க்கின்றனர். பெற்றோரின் அதிகாரத்திலிருந்து விடுபட விரும்புகின்றனர். எனது பிள்ளையை என்னால் கட்டுப்படுத்தவே முடியவில்லை என்ற வார்த்தை குழந்தைக்கு அத்து மீறலை இலகுபடுத்திக் கொடுக்கின்றது. அது தாய் பின்வருமாறு சொல்வது போன்றது: உனக்கு அத்து மீற முடியும். நீ விரும்பியபடி நடக்கலாம். நான் பலவீனன். உன்னைக் கட்டுப்படுத்த, திருத்த என்னால் இயலாது. உனக்கு அடிப்பதைத் தவிர வேறொன்றும் செய்ய முடியாது. உன்னைக் கட்டுப்படுத்தும் அதிகாரமும் எனக்கு இல்லை. எனவே உனக்கு ஏவல் விலக்கல் எனக்கு செய்ய முடியாது. நீ பலசாலி. உன்னை வழிகாட்ட எனக்குச் சக்தியில்லை. உன்னை வழிநடாத்தவே முடியாது என்று சொல்வது மாதிரியிருக்கும்.
குழந்தையின் முன்னால் தாய் தன் இயலாமையை ஒப்புக் கொள்வதுதான் மிகப் பெரும் தவறாகும். தனது பலவீனத்தை வெளிக்காட்டுவது குழந்தையைத் திருத்துவதற்கு சரியான வழிமுறை அல்ல. தாயின் பலவீனம் குழந்தை தனது விருப்பங்களை நிறைவேற்றுவதற்கு வழி அமைத்துக் கொடுக்கின்றது.

உண்மையில் தாய் தன்னை பலவீனமானவளாகக் கருதினாலும் அவள் குழந்தையை விட பலசாலியே. ஆனால் பெரும்பாலான தாய்மார் தாம் பலவீனர் என்பதை வெளிப்படையாகக் கூறுகின்றனர். குழந்தை தொந்தரவு கொடுக்கின்ற, நெருக்கீடுகளை ஏற்படுத்துகின்ற விடயங்களில் கண்டிப்பான முடிவுகளை எடுக்கக் கூடியவர்களாக இருந்தாலும் தீவிர உணர்ச்சி நிலைக்கு ஆளானதாலும் இளகிய உள்ளத்தை கொண்டிருப்பதாலும் குழந்தை வளர்ப்பதில், பயிற்றுவித்தலில் இவ்வாறான முடிவுக்கு வருகின்றனர். இத்தகைய தாய்மார்கள் தமது நல்லெண்ணத்தின் காரணமாகவும் மிகவும் பணிந்து போவதாலும் கண்டிப்பில்லாது தமது குழந்தைகளை செல்லப்பிள்ளைகளாக வளர்க்கவே விரும்புகின்றனர். குழந்தைகளின் விருப்பங்களுக்குப் பூரணமாக விட்டுக் கொடுத்து புதிய தலை முறைக்கு வாழ்வின் கரடு முரடான பகுதியைக் காட்டாது சொகுசான பக்கத்தை அறிமுகப் படுத்தவே ஆசைப்படுகின்றனர். இப்போது புதிய தலைமுறை அத்து மீறத் தொடங்கியதும் அவர்களை வழி நடாத்தவோ அவர்களுக்கு போதிக்கவோ முடியாதென்ற தமது இயலாமையை வெளிப்படையாகக் கூறுகின்றனர். குழந்தைகளை வழி நடாத்துவதை விட்டு விலகி ஒதுங்கிக் கொள்வதற்காகவும் பயிற்றுவித்தலில் தாம் எந்தக் குறையையும் வைக்கவில்லை என்று தப்பிக்

கொள்வதற்காகவும் புதிய தலைமுறையைக் கட்டுப் படுத்தவே முடியாது என்ற வார்த்தையைப் பாவிக்கத் தொடங்குகின்றார். இதனால் அவர்களுக்கு மன ஆறுதல் கிடைக்கின்றது. தமக்குத் தாமே சந்தோசப் பட்டுக் கொள்கின்றனர்.

இங்குதான் மிகப் பெரும் அபாயம் பொதிந்திருக்கின்றது. தாய்மார் குழந்தைகளை வழிநடாத்த முடியாது என்று தமக்குத் தாமே முடிவெடுத்துக்கொண்டு ஒதுங்கினால் பொறுப்பிலிருந்து நீங்கினால் புதிய தலைமுறைக்கு வழிகாட்டுவது யார்? அவர்களை நல்வழிப்படுத்துவது எப்படி? சின்னஞ் சிறிய குழந்தையை ஆள முடியாத, தோல்வியுற்ற தாய் அதனை வளர்க்கவும் முடியாது அக்குழந்தையைப் புரிந்து கொள்ளவும் முடியாது. அப்படி இருக்கும் போது அக்குழந்தை பெரியவனாகி பருவத்தை அடைந்து வன்முறையாளனாக மாறினால் அவனைத் திருத்த முடியாது. இப்படிப் பல மனிதர்கள் வன்முறையாளர்களாகவும் அத்து மீறுபவர்களாகவும் மாறினால் அந்த சமூகத்தின் நிலை என்ன? அவர்களை நெறிப்படுத்துவது எப்படிச் சாத்தியமாகும்? நிச்சயமாக சமூக ஸ்திரத்தன்மை பாதிக்கப்படும். இந்த வார்த்தையின் மற்றொரு அபாயகரமான நிலைதான் குழந்தைகள் பெற்றோர் மீது துணிச்சல் பெறுவதாகும். பெற்றோருக்கு கோபமூட்டுவதோடு பெற்றோரின் தவறுகளை வாய்விட்டுச் சொல்வார்கள். அத்தோடு விளையாட்டுப் பொருட்களை வீசுவார்கள். பாத்திரங்களை உடைப்பார்கள். தமது விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு தமது சகோதரரை அடிப்பார்கள் அல்லது அழவைப்பார்கள். தமது தேவையை அவசரமாக நிவைவேற்றித் தருமாறு பெற்றோரைப் பயமுறுத்துவார்கள்.

இந்த அத்து மீறலும் குழப்பபடியும் இறுதியில் தாயின் ஆளுமையைப் பாதிக்கும். அவளுக்குள்ள அந்தஸ்தை இல்லாமற் செய்து விடும். சிலபோது தூஷண வார்த்தைகளால் தாயைத் திட்டுவதோடு சத்தத்தை உயர்த்திப்பேச ஆரம்பிக்கும். தாயின் உபகாரத்தை எல்லாம் மறந்து குழந்தை முரண்பாடாகச் செயற்படும். எனவே இந்த வார்த்தையை தாய் அடிக்கடி பாவிப்பதால் தனக்குத்தானே தீங்கிழைத்து கொள்கிறாள். குழந்தைகள் நன்றி இல்லாமல் நடப்பதற்கு தானே காரணமாகிறாள். குழந்தை பெற்றோருக்கு மாறுசெய்வதற்குப் பெற்றோர் காரணமாக மாறுகின்றனர்.

# என்னைத் தொந்தரவு படுத்தினால் டொக்டரைக் கூட்டி வந்து ஊசி போடுவேன்

எச்சரிக்கை செய்வது பயிற்றுவித்தல் வழிமுறைகளில் ஒன்றுதான். குழந்தைக்கு தண்டனை வழங்குவதற்கு முன்னால் எதையாவது காட்டிப் பயமுறுத்துவது தாய்மாரின் வழிமுறையாகும். ஆனால் அச்சுறுத்துவதும் பயமுறுத்துவதும் எப்போதும் சரிவருவதில்லை. இதைப்பெரும் பாலான தாய்மார் அறியாதிருக்கின்றனர்.

முன்பெல்லாம் தாய்மார் ஜின், பேய், பிசாசு, மிருகங்கள் போன்றவற்றைக் கூறி தமது குழந்தைகளை பயமுறுத்திக் கொண்டிருந்தனர். ஆனால் இன்று தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்ததன் காரனமாக மருத்துவரின் ஊசியைவைத்து பயம் காட்டுகின்றனர். சில போது குத்தும் வண்டுகள், பூச்சிகளையும் காட்டி பயமுறுத்துகின்றனர். பொலிஸ்காரனிடம் பிடித்துக்கொடுப்பதாக பயம் காட்டுவதும் உண்டு. எதுவெல்லாம் குழந்தையை பயமுறுத்தும் என்று தாய்மார் கருதுகிறார்களோ அவற்றையெல்லாம் பிள்ளையிடம் கூறுவர்.

குழந்தையின் மட்டுமீறிய சுறுசுறுப்பு அவர்களின் கிளர்ச்சிசெய்யும் இயல்பு இவற்றைப் பார்க்கும் தாய் என்னைத் தொந்தரவு செய்தால் பொலிஸிடம் பிடித்துக்கொடுப்பேன் அல்லது டொக்டரிடம் கூட்டிப்போய் ஊசிபோடுவேன் என்ற வார்த்தையை திரும்பத்திரும்பக்கூறுவதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றாள். இது குழந்தைகளின் தொந்தரவிலிருந்து விடுபடுவதற்காக, அவர்களைத் தடுப்பதற்காக, அவர்கள் போடும் சப்தத்தை குறைப்பதற்காக, பயமூட்டுவதற்காக அவர்களின் செவிப்பறைகளில் நாளாந்தம் பல தடவைகள் விழும் வார்த்தையாகும்.

தாய் இந்த வார்த்தைகளைக்கூறி பயமுறுத்துவதன் நோக்கம் முரண்பாட்டைத் தவிர்த்தல், பிரச்சினையை முடித்தல், அவசரமாக வேலைகளைச் செய்தல், முழுமையாகக் கட்டுப்படவைத்தல் போன்ற உடனடிப் பயன்களைப் பெற்றுக்கொள்வதற்கே. தாயின் கட்டளைகளை எந்த மறுப்புமின்றி விரைந்து அவசரமாக நிறைவேற்றுவதற்காக

உண்மையான யதார்த்தத்தை அறியாத விடயங்களில் அதிர்ச்சியை ஏற்படுத்தி அச்ச உணர்வில் குழந்தையை ஆழ்த்துவதே இதன் நோக்கமாகும்.

தாய்மார் வீட்டுப் பொறுப்புக்களையும் பராமரிப்பையும் ஏற்றிருப்பதால் தமது குழந்தைகளுக்குப் பிழையான தகவல்களையோ, யதார்த்தத்திற்கு புறம்பான விடயங்களையோ சொல்லிக்கொடுப்பது கூடாது. பொலிஸ்காரரும் மருத்துவரும் ஏதோ ஒரு வகையில் உதவி செய்யும் மனிதர்கள்தான். பொலிஸார் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டுவதற்குப் பணிக்கப்பட்டவர்கள். வைத்தியர் நோயாளிகளைக் கவனிக்கின்றார். இவர்கள் மனிதர்களை துன்புறுத்தும் அலுகோஸ்மார் அல்ல.

மருத்துவரின் ஊசியும் நமது உடலில் மருந்தேற்றுவதற்குப் பயன்படும் கருவியாகும். இது பயனுள்ள பணியையும் செய்கின்றது. மாத்திரைகளை விட அவசர சிகிச்சையை மேற்கொள்வதற்கு இது உதவியாக அமைகிறது. எனவே இந்த வார்த்தையால் ஊசியின் யதார்த்தத்தை திரிபுபடுத்திக் கூறுகின்றோம். குழந்தையைப் பயமுறுத்தும் கருவியாக மாற்றி குழந்தையின் கவலைக்கும் பயததுக்குமுரிய காரணியாக ஆக்கிவிடுகின்றோம். இத்தகைய வார்த்தைகளால் உண்மையைத் திரிபுபடுத்துவது நல்லதா?

குழந்தைக்குச் சொல்லப்படும் எல்லாவற்றையும் நம்பி விடுகின்றது. பெற்றோரை, அது உயர்ந்த முன்மாதிரியாகக் கொள்கின்றது. பெற்றோரின் வார்த்தைகள் தான் உண்மையானவை என்று நம்புகின்றது. என்றோ ஒரு நாள் ஊசியின் உண்மையான அர்த்தம் தெரியவரும் போது அது சங்கடப்படும். தாய் எம்மை ஏமாற்றி விட்டாள் என்று மன நெருக்கடிக்குள்ளாகிறது.

பெற்றோர் மீதான நம்பிக்கையில் தளர்வு ஏற்படும். அதன் பின் அவர்கள் கூறும் எல்லா விடயங்களிலும் சந்தேகப்படும்.

தன்னுடைய கட்டளைக்கு குழந்தை அவசரமாக அடிபணிய வேண்டும் என்பதற்காக, தனது பேச்சைக் கேட்காது ஓடிவிடும் என்பதற்காக, தனது உபதேசங்களை சீரியஸ்ஸாக எடுக்காது என்பதற்காக தாய் பொய் சொல்லக்கூடாது. இது குழந்தையின் மென்மையான

மனதைப் புண்படுத்துவதுடன் பலவீனமான உடலுக்கும் ஊறுவிளைவிக்கின்றது.

குழந்தையும் இன்னொரு நபரிடம் நலனொன்றைப் பெறுவதற்காக இந்த வார்த்தையின் பின்னால் மறைந்து பொய்யைக் கற்றுக்கொள்கின்றது. இது மிகவும் அபாயகரமானதாகும். பொய்யை இஸ்லாம் கடுமையாக வெறுக்கின்றது. என்ன நியாயமான காரணங்களாக இருந்தாலும் பொய்யை நாடிச்செல்வதை இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கிறது.

குழந்தை பயமுறுத்தும் பிராணிகளையோ வைத்தியரின் ஊசியையோ முதலில் காண்பதில்லை. ஆனால் அவை பற்றிப் பயம் ஆழ் மனதில் அப்படியே பதிந்து மறைந்திருக்கும். என்றோ ஒரு நாள் வைத்தியரின் ஊசி அல்லது பயமுறுத்திய பொருட்கள் தேவைப்பட்டால் குழந்தை அப்போது பயந்த கோழையாக மாறிவிடும். ஆழ் மனதிலுள்ள அச்சம் மேற்கிளம்பிவிடும். அதன் எதிர்வினை திடீரென இயல்புக்கு மாறானதாக இருக்கும். உதாரணமாக தொலைக்காட்சியில் அத்தகைய பிராணிகளைக் காட்டும் போது கூட பயப்படுவார்கள்.

குழந்தைப் பருவத்திலிருந்தே நாம் பிள்ளைகளுக்கு அவர்களது அச்சம் அர்த்தமற்றது என்பதை எடுத்துக் கூறவேண்டும். நாம் பயந்தாங்கொள்ளிகளாக இருந்தாலும் அவர்களுக்கு முன்னால் வீரமாக நடிக்க வேண்டும். அவர்களின் உள்ளங்களில் துணிச்சலையும் வீரத்தையும் பதிக்க வேண்டும். வாழ்க்கையையும் அதன் அபாயங்களையும் எதிர்கொள்வதற்கும் வாழ்வின் துன்பங்களைச் சகித்துக்கொள்வதற்கும் நாம் குழந்தையைப் பழக்கவேண்டும்.

உண்மையில் இந்த அச்சுறுத்தலை தாயினால் நிறைவேற்றுவது சாத்தியமற்றது. குழந்தையைத் தண்டிப்பதற்கு பொலிஸையோ ஊசிபோடுவதற்கு வைத்தியரையோ வீட்டுக்குக் கொண்டு வரமுடியாது. ஆனால். இந்த வார்த்தையைப் பயன்படுத்தி பயமுறுத்துவது இலகுவானது. பயம் மனித உணர்வில் இயல்பாக காணப்படுகின்றது. இந்த யூகங்களாலும் பீதிகளாலும் மனத்தை நிரப்புவதும் இலகுவானது. இவ்வாறு ஆழமாக அச்சம் நிரப்பப்பட்டால் குழந்தை அற்பக்காரணங்களுக்காக தாய் சொன்ன உடனே பயப்படும். அதன் உடல் பதறும். நாடித்துடிப்பு அதிகரிக்கும். வியர்த்து விறுவிறுத்துப்போய்விடும். அபாயங்களிலிருந்து தற்காத்துக் கொள்வதற்கு

எல்லா மனிதர்களிடமிருந்தும் இந்த அச்ச உணர்வு காணப்படுகின்றது. "மனிதன் பதற்றக்காரனாகப் படைக்கப்பட்டுள்ளான். அவனைத் தீமை பீடித்தால் திடுக்கிட்டுப் போகிறான்".(70: 19,20) என்று அல்குர்ஆன் கூறுகின்றது.

எனவே குழந்தையிடமும் ஏதோ வகையில் பயம் காணப்படுகின்றது. அறிமுகமில்லாதவர்களைப் பார்க்கும் போது பயப்படுகின்றது. திடீர் சத்தங்களைக் கேட்டுப் பயப்படுகின்றது. மாறும் சூழலைக் கண்டும் பயப்படுகிறது. பூச்சி, புழுக்கள், வண்டுகள், பிராணிகளைக் கண்டும் பயந்து அழுகிறது. பின்னர் படிப்படியாக தன்னைச் சுற்றியுள்ள உலகைப் புரிந்து கொள்ள ஆரம்பிக்கின்றது. தன்னைச் சூழவுள்ள நிகழ்வுகள் நடப்புக்கள் என்பவற்றை உணர்கின்றது. ஆனால் அதன் அறிவாற்றல் காரணகாரிய வாதங்களோடு தொடர்புபடுத்தி விடயங்களைப் புரிந்து கொள்வதில் குறையுடைய தாகவே இருக்கிறது. இதனால் விடயங்களைப் புரிந்து கொள்வதில் குழப்ப நிலை காணப்படுகிறது. எனவே நாம் குழந்தைகளை அச்ச மூட்டி வளர்க்கும் போது அற்ப விடயங்களுக்கும் அது பயப்படலாம். அல்லது எல்லாவற்றுக்கும் அது திடுக்கிடலாம். உன்னைத் தண்டிக்க பொலிசைக் கொண்டு வருவேன். உனக்கு ஊசிபோட டொக்டரை கூட்டி வருவேன் என்ற வார்த்தையை நாம் திருப்பித்திருப்பி பாவிப்பதால் குழந்தையிடமிருந்து அச்ச உணர்வை அகற்றுவதற்குப்பதிலாக அதனை விசாலமாக்குகிறோம். எல்லாவற்றுக்கும் பயப்படக்கூடியதாக மாற்றி பொய்களாலும், யூகங்களாலும் குழந்தையின் மனதை நிரப்புகின்றோம். எனவே கண்ணுக்குப் புலப்படாத எல்லாவற்றிற்கும் குழந்தை பயப்படுகிறது. இதனால் தெரியாத விடயங்களுக்கு முன்னால் குழந்தை துணிச்சலை இழக்கின்றது. தடைகளைத் தாண்டவோ, கஷ்டமான கட்டங்களைக் கடக்கவோ குழந்தையிடம் போதிய துணிச்சலிருக்காது. குழந்தை எல்லா மூடநம்பிக்கைகளையும் ஏற்று நம்பி விடுகின்றது. காற்றுக்கு மரங்கள் அசைந்தால் கூட அது மிருகம் என நினைத்து விடுகிறது. இருளில் தெரியும் அசைவுகளை பிசாசு எனக் கருதி பயப்படுகிறது.

இது எந்த அடிப்படையும் அற்ற மிகைக் கூற்று என நினைத்து விடாதீர்கள். உறுதிப்படுத்தப்படாத கட்டுக்கதை என்று கூறாதீர்கள். குழந்தைகள் எதையும் எளிதில் நம்பக்கூடியவர்கள். பெரியவர்களானாலும் இந்த அச்சம் தொடரும். இருட்டில் போகாதே என்று பயம் காட்டியதால் வளர்ந்து பெரியவனாகி வீட்டில் மின் துண்டிக்கப்படும் போது கழிப்பறைக்குப்

போவதற்குக்கூட பயப்படுபவர்கள் இருக்கிறார்கள். அச்சம் அளவுக்கு மீறிப்போனால் ஒரு நோயாக மாறிவிடுகிறது. அது வாழ்க்கை முழுவதும் தொடர்கிறது. அது மனச்சிக்கல், உளநோய் ஆகும். உங்களுக்கு கட்டுப்பட வேண்டுமென்பதற்காக குழந்தையை அச்ச மூட்டாதீர்கள்.

# தற்காலத்துப் பிள்ளைகள் சரியான புத்திசாலிகள்

மிகவும் புத்திசாதுர்யமான பரம்பரையின் முன்னால் தாம் முகம் கொடுக்க முடியாமல் திணறுவதாக அண்மைக்காலமாக தாய்மார் கூறிவருகின்றனர். புதிய தலைமுறை விவேகமானவர்கள் எனவும் பலசாலிகள் எனவும் இவர்கள் வியப்போடு கூறுகின்றனர். இக் கருத்தை உறுதிப்படுத்தும் வகையில் பல சம்பவங்களையும் சாதனைகளையும் கூறுகின்றனர். இந்தக்காலத்துப் பிள்ளைகள் சரியான வித்தியாசம், புத்திக்கூர்மை, துணிச்சல் என்ற வார்த்தைகளை அடிக்கடி பாவித்துப் பேசுகின்றனர். தாங்கள் உண்மையைக் கூறுவதாகவே நினைக்கின்றனர். இந்த வார்த்தைகளைக் கூறுவதால் தமது பிள்ளைகள் இன்னும் பலசாதனைகள் நிகழ்த்துவார்கள், துணிகரச் செயல்களில் ஈடுபடுவார்கள் என்று கருதுகின்றனர்.

இந்தக் கருத்தோடு நான் முரண்படுகிறேன் என்று கூறுகிறார் ஆபிதா அல் முஅய்யத் என்ற உளவியல் ஆய்வாளர். நீங்கள் குறிப்பிடும் பரம்பரை மேம்பட்டதும் அல்ல தனித்துவமானதுமல்ல. மாறாக ஒவ்வொரு காலப்பிரிவிலும் வரும் வழக்கமான பரம்பரைதான். அதிலே திறமைசாலி, பின் தங்கியவர் விவேகி, முட்டாள், பலசாலி, பலவீனர் என்று முன்னைய பரம்பரையைப் போல இந்தப் பரம்பரையிலும் இருக்கின்றார்கள்.

எனவே தாய்மார் தமது குழந்தைகளை பராக்கிரமசாலிகள் என குறிப்பிடுவதனை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இந்தப் பரம்பரை அதி விவேகமானது, தனித்துவமானது என்பதை நான் நம்புவதில்லை. ஆனால் தாய்மார் மத்தியில் பரவிவரும் இந்த வார்த்தையின் அபாயம் குறித்தே நான் ஆராய்கின்றேன். அதை திருப்பித் திருப்பி கூறுவதால் இந்தப் பரம்பரையில் ஏற்படப்போகும் அபாயம் குறித்துத்தான் மிகவும் கவலைப் படுகின்றேன்.

தற்காலத்துப் பிள்ளைகள் சரியான புத்திசாலிகள் என்ற வார்த்தை எந்த வொரு ஆராய்ச்சி மூலமோ கருத்துக் கணிப்பிலோ நிறுவப்பட்ட

கருத்தல்ல. இன்று எல்லாப் பெற்றோரும் தமது பிள்ளைகள் தனித்தன்மை வாய்ந்தவர்கள் என்றே நினைக்கின்றார்கள். அதே நேரம் விஞ்ஞானத் தொழிநுட்பத்துறையில் இளம் கண்டு பிடிப்பாளனையோ விஞ்ஞானியையோ சிறிய வயதில் பெரும் அறிஞனையோ நாம் காணவுமில்லை.

எந்த ஆதாரமுமின்றி நாம் ஒரு கற்பிதத்தைச் செய்து அதை நாம் நம்பிக் கொண்டிருக்கின்றோம். இந்த வார்த்தையைக் கேட்டுக் கொண்டிருக்கும் நமது குழந்தைகள் தாம் மேம்பட்டவர்கள் என மகிழ்ந்து எந்த வேலைகளிலும் சீரியஸாக இயங்க மாட்டார்கள். வெறுமனே கற்பிதத்தால் ஒன்றுஞ்சாதிக்க முடியாது என்பதனை மறந்து விடுவார்கள்.

எமது குழந்தைகளின் எதிர் காலத்தைக் கருத்திற் கொண்டு இந்த வார்த்தையை திருப்பித் திருப்பி பாவிப்பதற்கு முன் இதன் நம்பகத் தன்மையை முதலில் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அவர்களின் உணர்வுகளை மதிப்பதற்காக நாம் அவர்களுடன் மோதக்கூடாது. அவர்களின் ஆற்றலை மதிப்பிடுவதில் நமது மிகைப்புகழ்ச்சியால் அவர்கள் தம்மைப் பெரியவர்களாகக் கருதும் போது அவர்களைத் தாழ்த்தவும் கூடாது.

இந்த வார்த்தை சரியானது என்று ஒரு வாதத்திற்கு எடுத்துக்கொண்டாலும் எந்தப்பயனுள்ள வேலைத்திட்டத்திலும் இறங்காது செயற்படாது ஆற்றலை மட்டும் நம்பிக்கொண்டிருந்தால் புத்தாக்க சிந்தனை அழிந்து விடும். குறைந்த திறனும் இல்லாமல் போய் விடும். புத்தாக்க சிந்தனையும் கண்டுபிடிக்கும் ஆற்றலும் விளைவைக் கொடுக்கும் வரை அதை வளர்ப்பதிலும் விருத்தி செய்வதிலும் ஈடுபடவேண்டும். உண்மையில் தனித்தன்மை வாய்ந்த தலைமுறையாக இருந்தால் தனித்துவமாகத் திட்டமிட்டு அதிலிருந்து பயன்பெற்றுக்கொள்ள வேண்டும். குறிக்கோளுடன் இந்த வார்த்தையைப் பயன் படுத்தும் போது செயற்பாட்டைத்தூண்டி விடும். குழந்தைகள் விவேகத்தையும் ஆற்றலையும் பல் துறைகளில் பயன்படுத்துவர்.

இந்த வார்த்தை மற்றொரு வகையிலும் அபாயகரமானது. அதாவது இதைக்கேட்டும் சில தாய்மார்களுக்கு குழப்பம் ஏற்படுகின்றது. அவர்களில் சிலர் குழந்தையிடம் எதிர்பார்க்கும் நற்பண்புக்கும் வேறு பண்புகளுக்கிடையிலும் பிரித்தறிய முடியாது தடுமாறுகின்றனர்.

விரும்பத்தக்க விவேகத்தையும், வெறுக்கத்தக்க தந்திர புத்தியையும் வேறுபடுத்த அவர்களுக்கு இயலாமல் போகின்றது.

இஸ்லாம் போற்றுகின்ற, முஸ்லிம் அணிகலனாகப் பெற்றிருக்க வேண்டிய அறிவாற்றலையும் துஷ்பிரயோகம், அத்துமீறயையும் அவர்களுக்கு பிரித்தறியத் தெரியாது. கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டியவை, நிலையானவை ஆகியவற்றுக்கும் பிடிவாதம், தவறான நடத்தை, கிளர்ச்சி போன்றவற்றிற்குக் கிடையில் வித்தியாசம் தெரியாது. அதிகாரத்திடம் உண்மையைப் பேசுவதற்கும் பெற்றோருடன் உறவினருடன் அன்பாக, நளினமாகப் பேசுவதற்குமிடையில் வேறுபடுத்திப் பார்க்கத் தெரியாது.

சில தாய்மார்கள் எல்லா நடத்தைகளையும் அறிவார்ந்தது, புத்திக்கூர்மையானது என்று நினைத்து குழந்தையை உற்சாகப் படுத்துவதுண்டு. முரண்பாடான செயலைக்கூட புகழ்வதுண்டு. இது குழந்தையின் விவேகத்தையும் தனித்துவத்தையும் காட்டுகிறது என நினைத்து அவள் புளகாங்கித மடைகிறாள். பின்னர் பிரித்தறியத் தெரியாத நிலைமைக்குத் தள்ளப்படுகிறாள். குழந்தைகளும் தவறுகளைத் தயங்காது செய்கின்றனர். பிறரைத் துன்புறுத்துவதைப் பெருமையாக நினைக்கின்றனர். தாம் தனித்துவமானவர்கள், மேம்பட்டவர்கள், புத்திசாலிகள் என்று கருதிக் கொண்டு இவற்றைச் செய்கின்றனர்.

பெரும்பாலான இளைஞர்கள் கெட்டுப்போவதற்கு இந்த உயர்வெண்ணமே காரணம் என உளவியலாளர் கூறுகின்றனர். குழந்தைகளின் நெறி பிறழ்வு அதிகரிப்பதற்கு இந்த வார்த்தை ஓர் ஊக்கியாகத் தொழிற்படுகிறது.

தலைமுறைகளுக்கிடையிலான இந்த மோதுகை எல்லா சமூகங்களிலும் காணப்படுகின்றன. பெற்றோரின் நியமங்கள், கட்டுப்பாட்டொழுங்குகளை குழந்தைகள் மீறுவது பரவலாக பயிற்றுவிப்பாளர்கள் முறையிடுகின்ற ஒரு விடயம்தான். எனவே இந்தவார்த்தை முன்னையதைப்போல அபாயகரமானது. கட்டிளம் பருவத்தினர் இன்று தம்மை உயர்வானவர்கள் என்றே கருதுகின்றனர். பெற்றோர்களும் அதைப்புரிந்து கொள்ள மாட்டார்கள். அவர்கள் நவீன காலத்திற்குப் படைக்கப்பட்டவர்கள். பெற்றோர் பழங்காலத்தைச் சேர்ந்தவர்கள். புதிய விடயங்களைப் பற்றி பெற்றோருக்கு எதுவும் தெரியாது. யதார்த்த உலகம் பற்றி அறியமாட்டார்கள். தொழில்நுட்பம் சார்ந்த விடயங்களில் அவர்களின் அறிவு பூச்சியம். அவர்கள் இற்றுப்போன பழைய சம்பிரதாயங்களை,

பழக்கவழக்கங்களை தூக்கிப் பிடித்துக் கொண்டிருக்கின்றனர். காலம் மாறிக் கொண்டிருக்கிறது என்பதை அறியத் தெரியாது என்று இளைஞன் நினைக்கிறான். இந்த வார்த்தையை குழந்தைகளுக்கு முன்னால் நாம் திருப்பித்திருப்பி பாவிப்பதால் மேற்குறிப்பிட்ட தீய சிந்தனை அவர்களின் உள்ளங்களில் இன்னும் ஆழமாய் பதிக்கின்றோம். அவர்களும் தமது விவேகம், ஆற்றல், துணிச்சல், பிடிவாதம் போன்ற பண்புகளால் மேம்பட்டவர்கள் எனக் கருதுவதால் முடிவுகளை மதிப்பிடுவதில் எம்மைவிட சக்தி வாய்ந்தவர்கள் என்றே வாழ்கிறார்கள். விடயங்களை தீர்மாணிப்பதில் எம்மைவிட அதிக ஆற்றல் பெற்றவர்களாக மாறி விடுவார்கள். வாழ்க்கையைப் புரிந்து கொள்வதில் தம்மிடம் மிகச்சிறந்த கோட்பாடு, வழிமுறை, அறிவு இருப்பதாகக் கருதுவார்கள். சுதந்திர உரிமைக்கு அருகதையுடையவர்களாக இருப்பதற்கு முன்பு பூரண சுதந்திரத்தை எம்மிடம் கேட்பார்கள். தாமே வாழ்வைத் தீர்மானிப்பார்கள். சிந்தனைச் சுதந்திரத்தைக் கேட்டுப் போராடுவார்கள். இந்த வார்த்தைக்குப் பின்னால், அவர்களது விருப்பங்களை உடனடியாக நாம் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என எதிர்பார்ப்பார்கள். ஏனையவர்கள் பெற்ற அனுபவத்தை, ஞானத்தை, நிபுணத்துவத்தை தமது விவேகம் மிகைத்துவிட்டது என்று நினைக்கின்றார்கள். பெற்றோர் சொல்லிக்கொடுக்கும் நியமங்கள், அறநெறிகளை தூக்கியெறிகின்றார்கள். எல்லாவற்றையும் நிராகரித்து விடுவார்கள். உயர் பெறுமானங்களுக் கெதிராக கிளர்ந்தெழுவார்கள். நற்குணங்களை அற்பமாகக் கருதுவார்கள். வழக்காறுகள், போற்றத்தக்க சம்பிரதாயங்களை எதிர்ப்பார்கள்.

உங்களுடைய குழந்தைகள் உங்களை விட எவ்விதத்திலும் மேலானவர்களாக இல்லையென்றால் நீங்கள் அவர்களைப் பெற்று வளர்த்தது வீண், உண்மையில் உங்கள் வாழ்வே வீண் என்று மார்சிஸ்கார்சரி கூறுகின்றார்.

“ஒவ்வொரு புதிய மனிதப்பிறப்பிலும் இயற்கையாகவே CORTEX-உடலின் நரம்பியல் தகவல் உற்பத்தி- ஆய்வுத்திறனும், மூளையின் விவேகச் செயற்பாட்டிற்கான பகுதியும் உயர்திறன் மிக்கதாகவே தொடருகிறது என நவீன உயிரியலாளர் ALIN PROCHIANTZ என்பவர் MACHINE- ESPRIT என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.” ஹதீஸ் கேட்டு அறிவிப்பவரை விட நுண்ணறிவுடையவர் அதை உணர்பவரே என்ற நபிகளாரின் கூற்றும் இங்கு நோக்கத்தக்கது. அப்படியாயின் தற்காலத்துப் பிள்ளைகள் சரியான புத்திசாலிகளா?

# சும்மா இரு பேசாதே

பெற்றோர் முதலிரண்டு வருடங்களில் குழந்தைக்கு நடக்கவும் பேசவும் கற்றுக் கொடுக்கின்றனர். அதற்கடுத்த வருடங்களில் ஓடித்திரியக் கூடாதென்றும் மௌனமாய் இருக்க வேண்டும் எனவும் குழந்தையை நிர்ப்பந்திக்கின்றனர் என்று அல்முக்தார் என்ற அறபு சஞ்சிகை கூறுகின்றது.

எல்லாப் பெற்றோரும் இவ்வாறுதான் நடந்து கொள்கின்றார்கள் என்று சொன்னால் அது மிகையன்று. பேசாத, ஓடித்திரியாத அமைதியான குழந்தையைப் பெற்றோர் எல்லோருமே பாராட்டுகின்றனர். சுறுசுறுப்பாக ஓடிவிளையாடிக் கொண்டிருக்கும் குழந்தையைவிட அமைதியான குழந்தையை மேலாகக் கருதுகின்றனர். இதனால்தான் ஒரு நாளைக்கு பல தடவைகள் சும்மா இரி பேசாதே என்ற வார்த்தையை அதில் உள்ள பாதகத்தைச் சிந்திக்காமல் குழந்தையை நோக்கிப் பாவிக்கின்றனர். எதிர் காலத்தில் குழந்தையின் உள, உடல்ரீதியாக ஏற்படுத்தப்போகும் பாதிப்பைப் பற்றி யோசிக்காமல் இந்த வார்த்தையில் அப்படி என்ன அபாயம் இருக்கிறது.

குழந்தை எல்லா வகையான உணர்வுகளும் கொண்ட சின்னஞ்சிறு மனிதனாகும். இதனால் அதன் ஆளுமையை மதிக்க வேண்டியது அவசியமாகும். அதை இழிவுபடுத்துவதோ அதன் ஆட்ட ஓட்டத்தை தடுத்து நிறுத்துவதோ கூடாது. அதன் விருப்பங்களை மதிக்க வேண்டும். அதன் உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். குழந்தை விரும்பும் நேரத்தில் விரும்புவதைப் பேசுவதற்கான சுதந்திரத்தைக் கொடுக்க வேண்டும். குழந்தையின் பேச்சைத் தடை செய்வது மௌனமாய் இருக்கும் படி கூறுவது மனஅழுத்தத்திற்கு இட்டுச்செல்லும். அல்லது திக்கு வாய், கொன்னல் போன்ற பேச்சோடு தொடர்பான குறைபாட்டுச் சிக்கலுக்கு இட்டுச்செல்லும்.

குழந்தையின் ஆளுமையில் பெற்றோர் கூறும் வார்த்தைகள் தாக்கத்தை

ஏற்படுத்துகின்றன. அவர்களின் விருப்புக்கேற்ப அது கட்டமைக்கப் படுகின்றது. "சும்மாயிரு பேசாதே" என்ற வார்த்தை சூழலுடன் நேரடி ஊடாட்டமில்லாமல் எல்லா வற்றையும் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும் என்று கற்றுக்கொடுக்கின்றது. தாயைத் தொந்தரவு செய்யாது நோவினைப் படுத்தாது சின்னக் குழந்தைக்கு முன்னால் இதைக்கூறுவது போற்றத்தக்கதாயினும் வளர்ந்து பெரியவனாகும் போது இது பிரச்சினையாக மாறுகின்றது. தன்னைச்சுற்றி நிகழும் எதையும் பொருட் படுத்தாதவனாக மாறிவிடுவான். எனவே பேசுதல், கேள்வி கேட்டல், ஓடுதல், விளையாடுதல் போன்ற இயல்பான, ஆரோக்கியமான வழியில் குழந்தை தனது ஆளுமையை வளர்த்துக்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும்.

சும்மா அமர்ந்திருத்தல், மௌனமாய் இருத்தல் என்பன அசைவு, கண்காணிப்பு, அவதானம், அதற்கு அடுத்து வினா எழுப்புதல் போன்ற வற்றில் தங்கியிருப்பதை அறிந்தபின்னால் குழந்தை இயங்குவதைத் தடைசெய்கின்றனர். குழந்தை உலகைக் கண்டறிய விரும்புகின்றது. பெரியவர்களைப் பின்பற்றவும் அவர்களின் ஆற்றலைப் பெறவும் ஆசைப்படுகின்றது. இதனால் அங்கும் இங்கும் சுற்றித் திரிய, துள்ளிப்பாய அது குழந்தையை எப்போதும் தூண்டிக் கொண்டிருக்கின்றது. வீட்டைப் பரிபாலிக்கும் தாயின் செயற்பாடுகளை அது அவதானிக்கின்றது. தந்தை உழைப்பதைப் பார்க்கின்றது. சகோதரர்கள் படிப்பதையும் விளையாடுவதையும் பார்க்கின்றது. இதனால் அதன் உணர்வுகளைத் தூண்டிவிடுகின்ற எல்லாவற்றையும் பற்றி கேள்வி கேட்கின்றது. அவர்களை அணுவணுவாகப் பின்பற்றும் நோக்குடன் மேலதிக விளக்கங்களைப் பெற ஆவல் கொள்கின்றது.

குழந்தையை நாசகாரச் செயற்பாடுகளிலிருந்து பயனுள்ள வேலையின்பால் திருப்புவதற்கு தாய்க்கு இது அரிய சந்தர்ப்பமாகும். அதீத கனவுலகில் இருந்து சிந்தனைக்கு, யதார்த்த உலகம் நோக்கி வழிகாட்டுவதற்கு ஏற்ற சந்தர்ப்பமாகும். பெற்றோரை அவதானிப்பதனூடாகவும் அவர்கள் செய்வதைப்பற்றி கேள்வி கேட்பதனூடாகவும் பொருட்களை ஒழுங்குபடுத்தக் கூடிய முறையை குழந்தைக்குக் கற்றுக் கொடுக்காமல் குழந்தைகளின் ஆற்றல்களை அழிப்பதற்குப் பதிலாக நாள் பூராகவும் பேசாமல் சும்மா அமர்ந்திருக்க வைக்காமல் தொலைக்காட்சி, கம்பியூட்டருக்கு முன்னால் உட்காருவதற்குப் பதிலாக வினைத்திறனுள்ள பயனுள்ள வேலைகளில் பயன்படுத்தலாம்.

சும்மா அமர்ந்திருத்தல், மௌனம் சாதித்தல் மூலம் குழந்தைக்கு கிடைக்க வேண்டிய அத்தியாவசிய அறிவைத் தடைசெய்கிறோம். அறியாமை அவர்களின் அனந்தரச்சொத்தாகிவிடும். ஆழ்ந்த அவதானம், சீரிய சிந்தனை, பயனுள்ள உரையாடல், புத்தாக்கச் சிந்தனை ஆகியவற்றை இழக்கச் செய்து விடுகின்றோம்.

மௌனம் குழந்தைக்கும் பெற்றோருக்கும் மத்தியில் பாரிய இடைவெளியைத் தோற்றுவிக்கின்றது. அவர்களுக்கு இடையிலான உறவை துண்டித்துவிடுகின்றது. குழந்தை மௌனம் சாதித்தால் தாய் தன் குழந்தையின் சிறப்பம்சங்களையும் குறைபாடுகளையும் அறியாது போகிறாள். குறைபாடுகளைப் பிரித்தறிந்து திருத்தமுடியாத நிலை ஏற்படுகின்றது. உரையாடல் மூலம் பெற்றோரின் அனுபவங்களிலிருந்து பயன்பெறும் வாய்ப்பை குழந்தை இழந்து விடுகின்றது. கேள்வி கேட்காமல் உரையாடாமல் குழந்தை நன்மை தீமையைப் பிரித்தறிவது எப்படி? ஹராம், ஹலாலை வேறு பிரிப்பது எப்படி? பயன், பயனற்றது என்பதை எப்படி விளங்கிக் கொள்வது? பண்பாட்டையும் ஒழுக்கத்தையும் கற்றுக்கொள்வது எவ்வாறு? மொத்தத்தில் தன்னைச்சுற்றியுள்ள உலகைப் புரிந்து கொள்வது எவ்வாறு? அவ்வாறே மௌனம் சாதிப்பதானது எமக்கும் குழந்தைகளின் உலகம் அவர்கள் அச்சங்கள், கவலைகள், ஆசைகள் ஆகியவற்றை அறிந்து தடைகளை அவர்கள் தாண்டுவதற்கு உதவ தடையை ஏற்படுத்துகின்றது. குடும்பம் தான் மனிதன் குதூகலிக்கும் முதலிடம். அங்கே தான் அவன் தனது உண்மையான உணர்வுகளை வெளிப்படுத்துகின்றான். கவலைகளை முறையிடுகின்றான். அன்பையும் ஆதரவையும் எதிர்பார்க்கின்றான். மனதில் மறைந்துள்ள சூட்சுமங்களையும் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் அச்சுறுத்தும் அபாயங்களையும் அறிய மிகச்சிறந்த வழிமுறை உரையாடலே. எனவே குழந்தையை மௌனமாக்குவதன் மூலம் அதில் மீட்சி பெறுவதற்கான வழியை அடைத்து விடுகின்றோம். அது தன் பிரச்சினைகளோடும் கவலைகளோடும் தனிமைப்படுத்தி வாழ்வதற்கு விட்டுவிடுகின்றோம்.

அசைவியக்கம் குழந்தையிடம் காணப்படும் இயல்பூக்கமாகும். ஓடுதல், பாய்தல், துள்ளுதல், பொருட்களை இழுத்தல் உயரமான இடங்களில் ஏறுதல் குழந்தையின் விருப்பத்துக்குரிய செயல்களாகும். எனவே குழந்தையின் அசைவியக்கத்தை தடுப்பது மிகப் பெரிய அநியாயமாகும். குறைந்த பட்ச உரிமையைக் கூட நாம் தடைசெய்கிறோம். அதன் சக்திக்கு அப்பாற்பட்ட ஒன்றை அதற்கு நிர்ப்பந்திக்கின்றோம். அசைவினால் வரும்

பயன்களை இழக்கச் செய்கின்றோம். "குழந்தையின் விளையாட்டுத்திறமை அதன் அறிவாற்றலையும் ஆரோக்கியத்தையும் அதிகரிக்கும்" (திர்மிதி) என்றொரு நபிமொழியும் உள்ளது.

அதனால்தான் இஸ்லாம் சுறுசுறுப்பாக இயங்குவதையும் ஊக்குவிக்கின்றது. நபிகளார் தனது புனிதமான பள்ளிவாயலில் தோழர்களை விளையாட அனுமதித்தார்கள். அவர்கள் விளையாடுவதை அவரும் அவரது மனைவிமாரும் பார்த்து ரசித்தார்கள். உற்சாகப் படுத்தினார்கள். நபிகளார் 'அப்துல்லாஹ் உபைதுல்லாஹ் என்று சிறிய தோழர்களை விழித்து யார் என்னிடம் விரைவாக முதலில் ஓடிவருகிறாரோ அவருக்குப் பரிசு தருவேன் என்று கூறுவார்கள்' என்று இப்னு அப்பாஸ் (ரலி) அறிவித்துள்ளார். அவர் மேலும் கூறும்போது அப்போது தோழர்கள் ஓடிப்போய் நெஞ்சிலும் மடியிலும் விழுவார்கள். நபிகளார் அவர்களை கொஞ்சி முத்தமிட்டு தன்னுடன் இருத்திக் கொள்வார்கள். உண்மையில் இஸ்லாம் குழந்தைக்கு நீச்சல், அம்பெறிதல் போன்ற விளையாட்டுக்களைக் கற்றுக்கொடுத்து உற்சாகப்படுத்த பெற்றோர்களைப் பணித்துள்ளது.

அசைதல் குழந்தையின் உடல் உள வளர்ச்சியில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. பெரியவர்களுக்கு உடல் பயிற்சி முக்கியமானது. வேலைப்பளுவைக் குறைத்து மன ஆறுதலை அளிக்குமாயின் குழந்தைகளுக்கு எந்த விதத்திலும் அது குறைந்ததல்ல. அவர்களுக்கு அது இன்றியமையாத தேவையாகும்.

குழந்தை பொருட்களை உடைத்துவிடும் என்பதாலும் அல்லது ஓடித்திரிந்து விளையாடுவதால் குழந்தை விபத்துக்குள்ளாகி விடக்கூடும் என்ற அச்சத்தினாலும் தாய்மார் குழந்தைகள் அசைவதைத் தடைசெய்கின்றனர். ஆனால் மஹ்மூத் மஹ்தி அல் இஸ்தன்பூலி இதற்கு நேர் மாற்றமான கருத்தைக் கூறுகின்றார். குழந்தைகள் செய்யும் பெரும் பாலான வேலைகள் அதன் பெற்றோருக்கு தீங்காகவே தென்படுகின்றன. ஆனால் உண்மையில் அவை பயனுள்ளவையே. பெற்றோர் தமது குழந்தைகளின் மனோ நிலையை அறியாததாலும் தமது சுயநலம் காரணமாகவும் குழந்தைகளை அமைதியாக இருக்கும் படி கூறுகின்றனர். குழந்தைகள் விளையாடுவது மணல் வீடு கட்டுவது உடைப்பது தீங்கு என்ற தீர்ப்பின் அடிப்படையிலேயே கூறப்படுகின்றது. இதில் பயனுள்ள ஆலோசனை என்னவெனில் பிறருக்கு தீங்கு பயக்காத நிலையில் குழந்தை தாம் விரும்பியவாறு விளையாடுவதற்கு விரும்பியவாறு கதைப்பதற்கு

அனுமதியளிப்பதே இதைப் பயிறுவிப்பதில் அரைவாசி நிபந்தனையாகும். அதாவது குழந்தைகள் இறைவன் படைத்த இயல்புக்கேற்ப தங்கள் உடலைப் பலப்படுத்தவும் அறிவை வளர்க்கவும் பயனுள்ள வேலைகளில் ஈடுபடுமாறு படைக்கப் பட்டுள்ளது. எனவே பெற்றோர் குழந்தையின் நடத்தையில் தலையிடுவது பெரும் தீங்காக முடியும்.

எனவே பெற்றோர் வீட்டுப் பொருட்களை உடைக்காத வகையிலும் குடும்ப அங்கத்தவர்களுக்கு தொந்தரவு ஏற்படாத வகையிலும் குழந்தை விளையாடுவதற்குப் பயனுள்ள விளையாட்டுப் பொருட்கள் கொண்ட அறையை வீடுகளில் தயார் படுத்திக் கொடுப்பது அவசியமாகும். உட்கார், மௌனமாய் இரு என்ற வார்த்தையை தாய் மொத்தமாக தவிர்த்துக் கொள்வதும் நல்லது. ஆபிதா அல்முஅய்யித் கூறுகிறார். சில போது இந்த வார்த்தை அவசியமாகக்கூடும். தேவையான நேரங்களிலேயே பயன் படுத்த வேண்டும். விருந்தாளிகள் வந்திருக்கும் போது பொதுக்கூட்டங்கள் நடைபெறும் இடங்களில் குழந்தையை ஓடித்திரியாமல் மௌனம் காக்கும் படி கூறுவது அவசியமானதே. ஆனால் வீட்டில் இருபத்தி நான்கு மணி நேரமும் வாயில் விரல் வைத்து குந்தியிருக்கச் செய்வது மிகப் பெரும் அநியாயமாகும்.

## பெரிய மனிதர்கள் அழமாட்டார்கள்

'நீ என்ன அழுமூஞ்சியாய் இருக்கிறாய். அழுவதற்கு நீ என்ன சின்னப்பிள்ளையா? பெரியமனிதர்கள் அழமாட்டார்கள்'. போன்ற வார்த்தைகள் நோய் காரணமாகவோ கவலையினாலோ குழந்தைகள் அழும் போது அழுகையை நிறுத்துவதற்காக பெற்றோரால் கூறப்படுகின்றன.

எல்லாக்கட்டங்களிலும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இந்த வார்த்தை கூறப்படுகின்றது. சிலபோது ஒரு நாளைக்குப் பலதடவைகள் திரும்பத்திரும்ப குழந்தைகளை நோக்கிக் கூறப்படுகின்றன. பெரிய மனிதர்கள் அழமாட்டார்கள் என்ற வார்த்தைமூலம் எதற்கும் அழாத மன இறுக்கமுள்ள ஒரு பரம்பரையை உருவாக்கிவிடலாம் என்று இந்தப் பெற்றோர் நினைக்கின்றனர். இதனால் இந்த வார்த்தை எல்லா இடங்களிலும் பரவத்தொடங்கிவிட்டது.

பெரிய மனிதர்கள் என்போர் கடின சித்தம் கொண்டவர்கள். இரக்க சிந்தயே இல்லாதவர்கள். உணர்வுகளுக்கு அவர்களிடம் எந்தப் பெறுமானனும் கிடையாது. இவர்கள் இனபந்துக்களோடு சேர்ந்து நடக்கமாட்டார்கள். அவர்களின் உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ள மாட்டார்கள். அநீதி இழைத்தாலும் அதற்காக வருந்தும் மனச்சாட்சியும் அவர்களுக்குக் கிடையாது. பாவங்கள் செய்தாலும் உபதேசங்களால் மனந்திருந்தவும் மாட்டார்கள். அபாயகரமான இந்த வார்தையைத் திரும்பத்திரும்பக் கூறுவதால் இத்தகைய அபாயகரமான விளைவுகளே ஏற்படும்.

அழுவதற்கு வெட்கப்படுபவர்களாக குழந்தைகளை ஆக்குவதும் அதை ஆண்மைக்குறைபாடாகக் கருதுவதும் அதைப் பலவீனத்தின் அம்சமாக நினைக்கவைப்பதும் எல்லோருக்கும் பொருந்துமா? அழுவதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்க முடியும். எல்லோரையும் ஒரே வகையானவர்களாகக் கணித்து ஒட்டு மொத்தத் தீர்ப்பு வழங்குவது எந்த வகையில் நியாயமாகும்.

அழுகை பலவீனத்தால், இயலாமையால், அதிகாரத்திற்கு ஆட்படுவதால் வெளிப்படலாம். நாம் முஸ்லிம்கள் என்ற வகையில் இந்தவகை அழுகை வரவேற்கத்தக்கதல்ல. இஸ்லாம் பலவீனமான முஸ்லிமைவிட பலசாலியான முஸ்லிமையே விரும்புகின்றது. அவ்வாறே இஸ்லாம் விரும்பக்கூடிய அழுகையும் இருக்கின்றது. நபிகளாரும் அழுதிருக்கிறார்கள். இஸ்லாம் விரும்பும் அழுகைக்கான காரணங்களை நாம் அறிந்திருப்பது முக்கியமாகும்.

ஒரு முறை நபிகளார் அபூபக்கரின் வீட்டுக் கதவடியில் ஆயிஷா (ரழி) அழுது கெண்டிருப்பதைக் கண்டார்கள். அதனால் நபிகளாருக்கும் அழுகை வந்தது. நபிகளாரின் மகள் தனது மகன் மரணித்துவிட்டதாகச் செய்தியனுப்பவே அவ்விடம் வந்தார்கள். குழந்தை நபிகளாரிடம் கொடுக்கப்பட்டது. அக்குழந்தையை கைகளிலேந்திய நபிகளார் உடனே அழுதார்கள். அப்போது ஸ.்.த் 'அல்லாஹ்வின் தூதரே ஏன் அழுகிறீர்கள்' என்று கேட்டார்கள். அதற்கு 'இது அல்லாஹ் தனது அடியார்களின் உள்ளத்தில் ஏற்படுத்தியிருக்கும் இரக்கம். இரக்கமுள்ள அடியார்களுக்கே அல்லாஹ் இரக்கம் காட்டுகின்றான்.' (புஹாரி,முஸ்லிம்) என்று கூறினார்கள்.

அவ்வாறே மற்றொரு ஹதீஸில் நபிகளார், அப்துர் ரஹ்மான் பின் அவுப் அவர்களின் கையைப் பிடித்துக் கொண்டு தனது மகன் இப்றாஹீமுடன் போனார்கள். குழந்தையைத் தூக்கி நபிகளார் மடியில் வைத்துக் கொண்டு அழ ஆரம்பித்தார்கள். அதற்கு அப்துர்ரஹ்மான் 'ஏன் அழுகிறீர்கள். நீங்கள் அழக்கூடாது என்று தடுத்தீர்கள் அல்லவா?' என்று கேட்டார். அதற்கு நபிகளார் 'இல்லை. நான் முட்டாள்தனமாக அழுவதைத்தான் தடுத்துள்ளேன். ஆடையைப் பிய்த்துக் கொண்டு மார்பில் அடித்து அழுவதையும் ஷைத்தானின் ஓசையை எழுப்புவதையுமே தடுத்துள்ளேன்'. (ஆதாரம் திர்மிதி) என்று கூறினார்கள்.

பிரிவுத்துயரினால் அழுவதை இஸ்லாம் விரும்புகின்றது. அபுவா என்ற இடத்திலுள்ள தாயாரின் கபுறடிக்கு ஆயிரம் வீரர்களோடு வந்த நபிகளார் அழுதார்கள். அதைக் கண்டு சுற்றியிருந்த அனைவரும் அழத் தொடங்கிவிட்டனர். இச்சம்பவம் அபூதாவுத், நஸாஈ ஆகிய கிரந்தங்களில் பதிவாகியுள்ளது. நபிகளாரின் மகள் மரணித்த போதும் கபுறடியில் குந்தியிருந்து நபிகளார் அழுதுள்ளார்கள். இச்சம்பவம் புஹாரியில் இடம்பெற்றுள்ளது. இப்றாஹீம் என்ற மகன் மரணித்த போது கண்கள் கண்ணீர்வடிக்கின்றன. உள்ளம் கவலைப்படுகின்றது. எமது ரட்சகன்

விரும்பியதையே நாம் கூறுவோம். இப்றாஹீமே உனது மரணத்திற்காக நாம் கவலைப்படுகிறோம். என்று நபிகளார் கூறிய செய்தி புஹாரியில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அவ்வாறே இறையச்சத்தினால் அழுவதையும் இஸ்லாம் வரவேற்கின்றது. அப்துல்லாஹ் பின் அஸ்ஸகீர் என்ற நபித்தோழர் இது பற்றிக் கூறும் போது அல்லாஹ்வின் தூதர் தொழுது கொண்டிருக்கும் போது நான் வந்தேன். கொதிகலன் இரைவதைப் போல நபிகளார் அழுது கொண்டிருந்தார்கள் (ஆதாரம் திர்மிதி, அபூதாவுத்) என்று கூறுகிறார்.

இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்களிடம் அல்குர்ஆனை ஓதும்படி நபிகளார் கூறினார்கள். நான் உங்களுக்கு ஓதிக்காட்டவா? உங்களுக்கல்லவா அது இறக்கப்பட்டது எனக்கேட்க, இன்னொருவர் ஓதக்கேட்பதை நான் விரும்புகிறேன் என்று கூறினார்கள். நான் சூறத்துந் நிஸாவை ஓத ஆரம்பித்தேன். ஒவ்வொரு சமூகத்திற்கும் அவர்களுடைய தலைவர்களைக் கொண்டு வந்து விசாரிப்போம். இவர்களுக்குச் சாட்சியாக நபியே உம்மை நாம் கொண்டுவருவோம் என்ற வசனத்தை ஓதிய போது நபிகளார் நிறுத்தும் படி கூறினார். நான் அவரைத் திரும்பிப்பார்த்தேன். அவரது கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. சூரியக் கிரகணம் ஏற்பட்டபோது நபிகளார் தொழுகையை நிறைவேற்றிக் கொண்டிருக்கும் போது இரண்டாவது ரக்காஅத்தில் வைத்து அழ ஆரம்பித்துவிட்டார். இதனை இமாம் நஸாஈ அவர்கள் பதிவுசெய்துள்ளார்.

நபிகளார் அழுதிருக்கும் போது நாம் பிள்ளைகளை அழக்கூடாது என்று ஏன் தடுக்க வேண்டும். அழுவதை அல்லாஹ்வின் அருள் என நபிகளார் கூறியிருக்கும் போது நாம் எப்படி அதைத் தடுக்க முடியும். இறையச்சத்தால் அழும் மனிதன் நரகம் நுழையமாட்டன். (ஆதாரம் திர்மிதி) என்று கூறியிருப்பதை எப்படி மறுப்பது. அல்குர்ஆனை ஓதும் பொழுது கவலையோடு ஓதவோண்டும், அழவோண்டும் என்றவாறு ஹதீஸ்களும் வந்துள்ளன. வரலாற்றில் அழிக்கப்பட்டவர்களின் இடங்களைத் தாண்டிச் செல்லும் போதும் நபிகளார் அழுதுள்ளார்கள். அழுவதை நபிகளார் குறைபாடாகக் காணவில்லை. பெரிய மனிதர்களே வரலாற்றில் அழுதிருக்கும் போது நாம் குழந்தைகளைப் பார்த்து அழக்கூடாது என்று எவ்வாறு கூறமுடியும். அழுகை மனித இயல்பு. அது நெகிழ்வையும் இளகிய மனத்தையும் பெற்றுக் கொடுக்கின்றது.

# நீ என்ன பெண்பிள்ளை மாதிரி வெட்கப்படுகிறாய்

நாம் ஒவ்வொருவரும் வாழ்வில் ஏதாவதொரு கட்டத்தில் வெட்கப்பட்டிருப்போம் என்பது நிச்சயம். பிறர் நம்மை நோக்கி கையை நீட்டும் போது முஸாபஹா (கைகுலுக்கல்) செய்வதற்காவது வெட்கப்பட்டிருப்போம். இன்னும் சிலர் தாம் வெட்கப்பட்ட தர்மசங்கடத்துக்குள்ளான செய்தியை சொல்லிக் கொண்டே இருப்பார்கள். இயல்பில் ஆண் குழந்தையை விட பெண் குழந்தை வெட்கப்படுகின்றது. அதைப் பெண்ணின் அணிகலனாகப் போற்றுவாரும் உண்டு. தனிமனித ஆளுமையில் வெட்கம் நேர் எதிர்மறையான தாக்கங்களை உண்டு பண்ணுகின்றது. வெட்கம் கூடுதலாக இருப்பதைவிட குறைவாக இருப்பது நல்லது. ஒரு மனிதனின் ஆளுமை பலமாக, உறுதியாக இருக்கும் போது வாழ்வின் கஷ்டங்களை எதிர்கொள்வதற்கான சக்தியையும் பெற்றிருப்பான். அதிகரித்த வெட்கம் அத்தகைய சவால்களுக்கு முகம் கொடுக்க முடியாத நிலையைத் தோற்றுவிக்கின்றது.

குழந்தையின் வெட்கத்தைப் பற்றிக் கூறுவதாயின் சூழலின் தாக்கத்திற்கு பெரும் பங்கு உண்டு எனக்கூறலாம். நன்மை தீமையைப் பிரித்தறிகின்ற அறிவை வழங்கி அழகிய முறையில் குழந்தையைப் பயிற்றுவிக்கலாம். அவ்வாறே குழந்தை வெட்கத்திற்குள்ளாகும் காரணிகள் பல இருக்கின்றன. அந்நியர்களுக்கு மத்தியில் வைத்துக் குழந்தையைத் தண்டித்தல், தவறு எனக்கூறும் முன்பே குழந்தையின் செயல்களை விமர்சித்தல், முழுக்குடும்பமுமே ஓர் அமர்வில் தன்னைப் பற்றிப் பேசுவதை உணரும் போதும் குழந்தை வெட்கப்படலாம். அந்நியர்களுக்கு முன்னிலையில் வைத்து குழந்தையைத் தண்டிப்பதால் குழந்தை மிகுந்த மன நெருக்கீடுகளுக்கு உள்ளாகின்றது. அப்போது வெட்கப்படுவது மட்டுமல்ல நீண்ட நேரம் அழுகின்றது. சில குழந்தைகள் பிறரிடமிருந்து அன்பளிப்புப் பொருட்களை அல்லது மிட்டாயை வாங்கும் போது வெட்கப்படுகின்றது. எந்தப் பொருளை எடுப்பதற்கு முன்னாலும் குழந்தை தன் தாயின் அல்லது தந்தையின் அனுமதியை எதிர்பார்க்கின்றது.

குழந்தையிடம் வெட்க உணர்வு வெளிப்படும் போது முகம் சிவக்கின்றது. அல்லது அழுகை வெளிப்படுகின்றது. அல்லது பேச்சு முணுமுணுப்பாக மாறும். பிறருக்கு கட்டுப்படும் போதும் அல்லது பிறருக்கு மதிப்பளிக்கும் போதும் குழந்தையிடம் வெட்கம் வெளிப்படுகின்றது. இது பெற்றோருக்கு ஒரு வரப்பிரசாதம் தான். ஆனால் தொடர்ச்சியான விமர்சனத்திற்கும் கண்டனத்திற்கும் குழந்தை ஆளாகும் போது சுதந்திரமாக இயங்க முடியாத பலவீன நிலைக்குத் தள்ளப்படும். இது எதிர்காலத்தில் அதன் ஆளுமையைப் பாதிக்கும். குழந்தையின் மனவளர்ச்சியோடு வெட்கம் முரண்படாமல் பார்த்துக் கொள்வது பெற்றோரின் கடமையாகும்.

குழந்தை வெட்கப்படும் மற்றொன்று பாடசாலைக் கட்டமாகும். பாடசாலையில் அல்லது வகுப்பறையில் வெட்கப்படுவதற்கு நிறைய சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. ஆசிரியர் குழந்தையை சகபாடிகளுக்கு மத்தியில் வைத்துத் தண்டிக்கும் போது, கேள்விக்கான விடை தெரியாத போது படிப்பித்துக் கொண்டிருக்கும் போது ஆசிரியர் திடீரெனப் பிள்ளையிடம் கேள்வி கேட்டு விடையளிக்க முடியாத போது அல்லது பிழையான விடைகளைக் கூறும்போது மாணவர்கள் சிரித்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். குறிப்பாக பரீட்சைப் பெறுபேறுகள் அறிவிக்கப்படும் போதுதான் பிள்ளை கூடுதலாக வெட்கப்படுகின்றது. நெருங்கிய உறவுக்காரருக்கு மத்தியில் வைத்து அறிவித்தால் நிலமை மோசமாகிவிடும். பரீட்சைப் பெறுபேற்று அட்டையை பிள்ளையின் கையில் ஒப்படைத்தால் அதைப் பெற்றோரிடம் காட்டுவதற்கும் வெட்கப்படும். இவ்வாறு சங்கடங்களுக்கு உள்ளாகும் குழந்தை முகம் சிவத்தல், மௌனமாக இருத்தல், முணுமுணுத்தல் போன்ற பதிற்குறிகளையே வெளிப்படுத்தும்.

இந்த வார்த்தை எப்படி அபாயகரமானதாக மாறுகிறது என்றால் ஆண்கள் வெட்கப்படக்கூடாது பெண்கள் மாத்திரம்தான் வெட்கப்படுவதற்குரியவர்கள் என்று கற்பிக்கின்றது. வெட்கம், ஆண்மைக்கு இழுக்கு என்று கூறுகின்றது. இது ஆண் குழந்தைகள் வெட்கமின்றி பாவச்செயல்களில் ஈடுபடுவதற்கும் தீமைகளைப் புரிவதற்கும் வழிசமைத்துக் கொடுத்துவிடும். வெட்கம் ஈமானில் ஒரு பகுதி என்பதும் 'வெட்கமில்லாவிட்டால் நீ விரும்பியதைச் செய்' என்ற நபிமொழியும் பெண்களுக்கு மாத்திரம் உரியதல்ல. அது ஆண்களையும் நோக்கிக் கூறப்பட்டது.

பெரும்பாலான பெண் குழந்தைகள் திருமணப் பேச்சுவார்த்தையின் போது

வெட்கப்படுகிறார்கள். வயது குறைவாக இருந்தால் தமது கருத்தை வெளிப்படுத்துவதற்கு இன்னும் வெட்கப்படுவார்கள். விருப்பமா விருப்பமில்லையா என்பதை குடும்பத்தாரிடம் வெளிப்படுத்துவதற்கும் வெட்கப்படுவார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் நபிகளார் மௌனம் சம்மதத்திற்கு அடையாளம் எனக்கூறியுள்ளார்கள். இதனால் பெற்றோர், பொறுப்பாளர்கள் இந்த விடயங்களில் தலையிட்டுத் தீர்த்துவைப்பார்கள். திருமணப் பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதும் இந்த வெட்கம் வருகிறது. அப்போது தன்னியல்பான செயற்பாடுகள் இருசாராரிடமும் குறைந்துவிடும். இத்தகைய சங்கடங்களுக்கு அதிகமாக உள்ளாகுபவர்கள் பெண் பிள்ளைகளே! ஆனால் தாய்வழிச் சமூக அமைப்பில் பெண் வீட்டில் குடியிருக்கும் ஆண்பிள்ளைகளுக்கும் இந்த வெட்கம் காணப்படுகின்றது. புதிதாக வேலைக்குச் சேரும் யுவதிகளிடமும் வெட்கம் காணப்படுகின்றது. சகஊழியர்களுடன் கலந்து வேலைசெய்ய வேண்டி ஏற்படுவதால் இந்த வெட்கம் வருகின்றது. நாட் செல்லச் செல்ல இது குறைந்து செல்வதுமுண்டு.

இந்த வார்த்தையின் மற்றொரு அபாயம் இரு பாலாருக்கும் மத்தியில் பாராபட்சத்தைத் தோற்றுவிக்கின்றது. 'நாம் உங்களைச் சோடிகளாகப் படைத்துள்ளோம்' என அல்லாஹ் கூறுகின்றான். சோடியில் ஏற்றத்தாழ்வு கிடையாது. மனிதன் அல்லாஹ்வின் பிரதிநிதி என்ற கருத்தும் பாராபட்சத்தை இல்லாமல் ஆக்குவதற்காக கூறப்பட்டதாகும். பிரதிநிதி என்பவன் ஆண் மட்டுமல்ல. பெண்ணும் சேர்ந்துதான் பிரதிநித்துவப் பொறுப்பை நிறைவேற்ற வேண்டும். எனவேதான் மற்றொரு ஹதீஸில் 'பெண்கள் ஆண்களுக்கு சரிநிகரானவர்கள்' என நபிகளார் கூறியுள்ளார்.

# நீ ரொம்ப முரண்பாடானவன்

இந்த வார்த்தை சாதாரணமாக அனைவரும் நாளாந்தம் பயன்படுத்துகின்ற வார்த்தையாகும். உதாரணமாக வீட்டில் குழப்படியான ஒரு குழந்தையைப் பார்த்து அவன் ரொம்ப முரண்பாடானவன், முரண்டு பிடிக்கிறவன், அவன் முரண்பாடுகளின் மொத்த உருவம் என்றெல்லாம் கூறுவதை நாம் கேட்கலாம். இதன் மூலம் அக்குழந்தை தனது நடத்தைகளில் எதிரும் புதிருமான நிலையை மேற்கொள்வதை சுட்டுவதற்கே இந்த வார்த்தை பயன்படுத்தப்படுகின்றது. துணிவும் கோழைத்தனமும் சுயநலமும் பொதுநலமும் கோபமும் சாந்தமும் கஞ்சத்தனமும் தாராளமும் பெருந்தன்மையும் அற்பத்தனமும் போன்ற முரண்பட்ட நிலைகளை பெரிய மனிதர்களிடமும் கூட நாம் காணும் போது இவ்வாறு கூறுவதுண்டு. எப்போதும் சண்டையிட்டுக் கொண்டே இருக்கும் குழந்தைகளுக்கு மட்டுமல்ல நாடுகள், சமூகங்கள், வர்க்கங்களுக்குக்கூட இந்த வார்த்தை பயன்படுத்தப்படுவதுண்டு.

முரண்பாடு என்பது இயற்கையானதே. உலகம் தோன்றியது முதல் உயிரினங்களும் பிரபஞ்சமும் வளர்ந்து முன்னேறியுள்ளன. இதற்குக் காரணம் முரண்பட்ட உறவுகள் ஒன்றுடன் ஒன்று நேரெதிர் பண்புகளுடன் இயங்குவதே என விஞ்ஞானம் நிறுவியுள்ளது. வானங்கள் பூமியைப் படைத்திருப்பதிலும் இரவு பகல் மாறி மாறி வருவதிலும் அத்தாட்சிகள் இருக்கின்றன என்று அல்குர்ஆன் கூறுகின்றது. எனவே மனிதனும் அதில் அடங்குகின்றான். ஆண், பெண், குழந்தைப் பருவம், வயோதிபப் பருவம் என மனிதனுக்குள்ளும் முரண்பட்ட அம்சங்களை அல்லாஹ் படைத்துள்ளான். மனிதனின் மனத்தில் மட்டுமல்ல புறவுலகிலும் முரண்பாடுகள் இருக்கின்றன. உயிர்வாழ்தலில் உற்கொள்ளுதல் x வெளித்தள்ளுதல் காந்தத்தில் வடதுருவம் x தென்துருவம் மின்சாரத்தில் நேரேற்றம் x எதிரேற்றம் கணிதத்தில் கூட்டல் x கழித்தல், பெருக்கல் x பிரித்தல் குணத்தில் அழுகை x சிரிப்பு, உண்மை x பொய், வாழ்வு x மரணம், நல்லது x கெட்டது, விஞ்ஞானம் x அஞ்ஞானம், உற்பத்தி x

நுகர்வு இப்படி எண்ணற்ற முரண்பாடுகள் இப்பிரபஞ்சத்திலும் மனிதனின் சமூக வாழ்விலும் நிறைந்து கிடக்கின்றன.
பொருள்களின் வளர்ச்சிக்கு முரண்பாடுகளின் இயக்கம் காரணமாக இருப்பதைப் போல மனித வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் இந்த இயங்கியலே காரணமாக இருக்கின்றது. ரொம்ப முரண்பாடானவன் என்று குழந்தையை நாம் ஒதுக்கி வைக்கும் போது அதன் வளர்ச்சியையும் ஒதுக்கி வைப்பதற்குச் சமனாகும். எல்லா மனிதர்களையும் ஒரே அச்சில் வார்க்கும் போதுதான் முரண்பாடுகளை ஒழிக்க முடியும். ஆனால் அது சாத்தியமில்லை.

இது பற்றி கலாநிதி யூசுப் அல் கர்ளாவி கூறும்போது 'மனித இயல்பைப் பொறுத்தவரையில் அல்லாஹுத்தஆலா மனிதர்களை வித்தியாசமாகவே படைத்துள்ளான். ஒவ்வொரு மனிதனுக்கும் தனியான ஆளுமையும் தனியான சிந்தனைப் பாங்கும் இருக்கவே செய்யும். இந்த பௌதீக ரீதியான வேறுபாடு கருத்துலகிலும் வெளிப்படும். இவ்வாறு வித்தியாசப்படும் மனிதர்களை ஒரே அச்சில் வார்க்க நினைப்பது வேடிக்கைக்குரிய விடயமாகும்.

மனிதர்களில் சிலர் எப்போதும் கடுமையை விரும்புவார்கள். வேறுசிலர் இலேசை நாடுவார்கள். இன்னும் சிலர் சட்டவசனத்தின் மேலோட்டமான கருத்தை எடுத்துக் கொள்வார்கள். சிலர் அதன் உயிரோட்டத்தையும் உள்ளடக்கத்தையும் எடுத்துக் கொள்வார்கள். சிலர் நன்மையைப் பற்றியே வினவுவார்கள். சிலர் எப்போதும் தீமையைப் பற்றியே கேட்பார்கள். சிலர் மனிதர்களோடு ஒட்டி உறவாடுவார்கள். சிலர் ஒதுங்கிப் போய் வாழ்வார்கள். உள, உடல், பண்புகளில் காணப்படும் இந்த வேறுபாடுகள் சட்டத்துறையில் பாதிப்பு ஏற்படுத்துவதைத் தவிர்க்க முடியாது.' என்று கூறுவது நோக்கத்தக்கது.

சாதாரண மனிதர்களுக்கு மட்டுமல்ல நபிமார்கள் மத்தியிலும் முரண்பட்ட இயல்புகளை நாம் அவதானிக்க முடியும். 950 ஆண்டுகள் அல்லாஹ்வின் பாதையில் மக்களை அழைத்த நூஹ் நபியவர்கள் இறுதியாகக் கேட்ட பிரார்த்தனை 'இப்பூமியின் மேற்பரப்பில் எந்தவொரு காபிரையும் வைக்காமல் அழித்துவிடு' என்று கேட்டார்கள். ஆனால் இதற்கு முரணாக இப்றாஹீம் நபி 'இவர்கள் என்னை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் இவர்களின் பிற்சந்ததியினர் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளச் செய்வாயாக' என இறைவனிடம் பிரார்த்தித்தார்கள். மூஸாவுக்கும் ஈஸாவுக்கும் இயல்பில்

எவ்வளவு முரண்பாடு. வலது கன்னத்தில் அடித்தால் இடது கன்னத்தைக் கொடு என்ற அகிம்சா வாதத்தை மூஸா ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. இதே போக்கை நாம் ஸஹாபாக்களிடமும் காணலாம். பத்ர் யுத்தக் கைதிகளை என்ன செய்யலாம் என நபிகளார் ஆலோசனை கேட்டபோது அபூபக்கர் ரழி அவர்கள் மன்னிப்பையே விரும்பினார்கள். உமர் கொலை செய்ய வேண்டும் என்று கூறினார்கள். இப்னு உமருக்கும் இப்னு அப்பாஸுக்கும் இடையில் நூற்றுக் கணக்கான சட்டப் பிரச்சினைகளில் முரண்பாடுகள் இருந்தன.

இப்படிப் பார்க்கும் போது நமது குழந்தையின் முரண்பாட்டை நாம் பெரிது படுத்தத் தேவையில்லை. அந்த முரண்பாடு ஒழுக்க ரீதியானதாக இருந்தால் அதை மாற்றியமைக்க வேண்டும். சிந்தனா ரீதியாக இருந்தால் அதை அதற்குரிய ஒழுகலாற்று விதிகளுடன் வளர்த்தெடுக்க வேண்டும். அல்லாஹ் மனிதர்களை ஒரே ஆத்மாவிலிருந்து படைத்து பல்வேறு கிளைகளாகவும் கோத்திரங்களாவும் ஆக்கியுள்ளான். பரஸ்பரம் ஒருவரையொருவர் புரிந்து வாழ்வதற்காக. முரண்பாடுகள் பிளவுகளாக மாறக்கூடாது. ஆன்மாக்கள் ஒன்றோடொன்று பின்னிப்பிணைக்கப்பட்ட படைபோன்றது. ஒன்றையொன்று புரிந்து கொண்டால் அன்பு கொள்ளும் புரிந்து கொள்ளாவிட்டால் முரண்படும் என நபிகளார் கூறியுள்ளார்கள். எனவே ஆன்மாக்களின் உலகில் முரண்பாடு கிடையாது. அங்கு எல்லாமே சமம். பௌதீக உலகில்தான் முரண்பாடு உருவாகின்றது. அம்முரண்பாட்டை பிளவாக மாற்றாமல் இருப்பதற்கு இஸ்லாமிய உளவியல், வழிகாட்டலை வழங்குகின்றது.

## படி.. படி.. படி..

அண்மையில் மாணவர்களுக்காக நடத்தப்பட்ட கல்விக் கருத்தரங்கு ஒன்றில் கருத்துக் கணிப்பு மேற்கொள்ளப்பட்டது. அதிலே பின்வருமாறு ஒரு கேள்வி அமைந்திருந்தது. உங்கள் வீட்டில் பெற்றோர் அடிக்கடி கூறும் வார்த்தை எது? அதற்கு 150க்கு மேற்பட்ட மாணவ மாணவிகள் 'படி.. படி.. படி..' என்றுதான் பதிலளித்திருந்தார்கள். அதில் சுமார் 200 பேர் அளவில்தான் கலந்து கொண்டார்கள். இச்சம்பவத்திலிருந்து இந்த வார்த்தை எப்படி அபாயகரமானதாக மாறுகிறது என்பதை நோக்குவோம்.

கேள்விகளைக் கேற்பதுதான் குழந்தைகளின் வேலை. ஆனால் பாடசாலைக்குள் நுழைந்ததுமே கேள்வி கேட்கும் ஆற்றலை முற்றிலும் தகர்த்தெரியக்கூடிய கல்வி முறையைத்தான் நாம் தக்கவைத்துக் கொண்டிருக்கிறோம். வகுப்பறைக்குள் நுழைந்ததும் ஆசிரியர்கள் சொல்வதெல்லாம் எழும்பு, கையைக் கட்டு, பொத்து வாயை என்பதுதான். வாயைப் பொத்திக் கொண்டு கவனிக்க வேண்டும் என்பதே மிகப்பெரிய வன்முறையாகும். பாடசாலை விட்டு குழந்தைகள் வீட்டுக்கு வந்ததும் குழந்தைகளுக்குத் தாய்மார் Home Work செய்ய கட்டளையிடுகிறார்கள். அப்போது தாய்க்கும் குழந்தைக்கும் இடையே நடக்கின்ற கொடுமையைச் சொல்ல முடியாது. நமது கல்விச் சூழலில் ஆசிரியரும் முரடு. பெற்றோரும் முரடர்களாக இருக்கிறார்கள். இவர்களின் ஆக்கினைகளால் இந்தப் பிஞ்சுக் குழந்தைகள் மனப்பாடம் செய்யும் இயந்திரங்களாய் உருமாற்றப்படுகின்றனர். $E=MC^2$ என்னும் சமன்பாட்டைக் கண்டுபிடித்தவர் யார் என்றுதான் வினாத்தாளில் கேட்டுக் கொண்டிருக்கின்றோம். $E=MC^2$ என்பதை நீ ஏற்றுக் கொள்கிறாயா அல்லது இதற்கு மாற்றுச் சூத்திரம் ஒன்றை உன்னால் கண்டுபிடிக்க முடியுமா? என்று எப்போது கேள்வி கேட்கத் தொடங்குகின்றோமோ அன்றைக்குத்தான் நம்குழந்தைகளின் அறிவை மதிக்கின்றோம் என்று அர்த்தமாகும். வகுப்பறையில் ஆசிரியர் பேசுவதை கேட்டுவிட்டுச் செல்வதுதான் படித்தல் என்றால் மாணவர்கள் வானொலி கேட்கலாம்.

படி.. படி.. என்பதன் மூலம் படிப்பை மட்டும்தான் வலியுறுத்துகிறோமேயொழிய சக மனிதர்களுடன் எவ்வாறு பழகவேண்டும் என்பதை நாம் வலியுறுத்தத் தவறிவிடுகிறோம். இதனால் இன்று கல்வி வன்முறைக் கல்வியாக மாறியிருக்கின்றது. அடுத்தவன் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை நான் மாத்திரம் முன்னேறினால் போதும் எனக்கருதும் சுயநலம் பிடித்தவர்களையே இந்தக் கல்வி முறை உருவாக்கியிருக்கின்றது.

படி.. படி.. என்பதன் மற்றொரு அபாயம் அது படித்தவர்கள் படிக்காதவர்கள் என்று மனிதர்களை வன்மையாகப் பிரித்துப் பார்க்கும் ஓர் உணர்வைத் தோற்றுவிக்கின்றது. இதனால் படிக்காதவர்களுடன் குழந்தை கலந்து பழகாத நிலையைத் தோற்றுவிக்கின்றது. இப்பிரிப்பு ஆரோக்கியமானதல்ல. வெறும் புத்தகப் படிப்பும் பாடத்திட்டத்திற்குள்ளே மாத்திரம் நின்று சிந்திப்பதும் மட்டும்தான் படிப்பு அல்ல. அதற்கு வெளியிலும் மனிதர்கள் பல்வேறு ஊடகங்கள் வாயிலாக கல்வியைப் பெற்றுக் கொண்டிருக்கின்றனர். எனவே இன்று படிக்காதவர்கள் என்று பெருமளவில் சொல்வதற்கு யாரும் இல்லை. எல்லோரும் ஏதோ ஒருவகையில் வாழ்க்கையை நடாத்தும் அறிவைப் பெற்றுத்தான் இருக்கிறார்கள்.

படி.. படி.. என்பதன் மூலம் படிப்பை நாம் குறுக்கிவிடுகிறோம். நபி (ஸல்) அவர்கள் அறிவு காணமல்போன பொருள். என்று கூறியுள்ளார்கள். காணாமல் போன பொருளை கண்டுபிடிக்க வேண்டுமாயின் தேடவேண்டும். அறிவு பொதுப்பொருளாக இருந்தால்தான் தேடுவது சாத்தியமாகும். அது பாடப்புத்தகமாகவோ ஆசிரியரின் குறிப்பாகவோ சுருங்கிப் போனால் அங்கே தேடுவதற்கு இடமிருக்காது. சொல்வதை அல்லது பாடப்புத்தகத்தில் உள்ளதை அப்படியே ஏற்றுக் கொள்வதாகவே கல்வி அமைந்துவிடும். இறைவா! அறிவைப் பெருகச்செய்வாயாக! என்று பிரார்த்திக்கும் படி அல்குர்ஆன் கூறுகின்றது. எனவே அறிவு வளரும் தன்மை உள்ளது. அது வளரவேண்டுமானால் சிந்திப்பதற்கு கேள்வி கேட்பதற்கு வாய்ப்பளிக்க வேண்டும். உங்களுக்கு சொற்ப அறிவே வழங்கப்பட்டுள்ளது என்றும் அல்குர்ஆன் கூறுகின்றது. எனவே சொற்ப அறிவை அதிகரிப்பதற்கே கல்வி அவசியப்படுகின்றது.

படி.. படி.. என்பதன் மூலம் குழந்தைக்கு எதைப்படிப்பது என்ற மனக்குழப்பமும் தோன்றுகிறது. புத்தகத்தைப் படிப்பதா? அப்பியாசக்

கொப்பியில் எழுதுவதா? அல்லது வேறு ஏதாவது செய்வதா? என்ற குழப்பம் குழந்தைக்கு ஏற்படுகிறது. காலப்போக்கில் புத்தகத்தைப் புரட்டுவதும் அப்பியாசக் கொப்பியில் எதையாவது கிறுக்குவதும்தான் படிப்பு என்ற ஒட்டுமொத்த முடிவுக்கு குழந்தை வந்துசேர்கின்றது. இதுதான் இந்த வார்த்தையின் மாபெரும் அபாயமாகும்.

குழந்தைக்குப் படிப்பின் மீது அக்கறை ஏற்பட வேண்டுமானால் பெற்றோர் தினமும் ஏதாவதொரு புத்தகத்தை, சஞ்சிகையைப் படிக்க வேண்டும். பெற்றோர் படிப்பதையும் எழுதுவதையும் பார்த்தால்தான் குழந்தைக்குப் படிப்பதன் முக்கியத்துவம் புரியும். பெற்றோர் குதூகலமாக தொலைக்காட்சி பார்த்துக்கொண்டு குழந்தையை மட்டும் படி படி படி என்றால் அது எப்படிப் படிக்கும்?!

அவ்வாறே நாம் படிக்கும் வேகத்தில் குழந்தையும் படிக்கவேண்டும் மனனம் செய்ய வேண்டும் என்றும் எதிர்பார்க்கக் கூடாது. எந்த விதையும் உடனே முளைப்பதில்லை. அதற்கேற்ற தட்ப வெப்ப சூழல் அமையும்போதுதான் முளைவிடுகின்றது. நூறு பாகை வெப்பமேற்றும் போதுதான் தண்ணீர் கொதிக்க ஆரம்பிக்கின்றது. நாற்பத்திரண்டு வாரங்கள் தாயின் வயிற்றில் இருந்த பின்புதான் பூரண வளர்ச்சியோடு குழந்தை பிறக்கின்றது.

# எங்கட பிள்ளை நல்ல பிள்ளை

பிறர் முன்னிலையில் குழந்தை ஏதாவது பொருளை எடுக்க ஆசைப்படும் போது அல்லது அழும்போது குழந்தையைக் கட்டுப்படுத்துவதற்காக பெற்றோர் பிரயோகிக்கும் வார்த்தைதான் 'எங்கட பிள்ளை நல்ல பிள்ளை' என்பதாகும். இவ்வாறு கூறும்போது குழந்தை அருகிலிருக்கும் தட்டையோ அல்லது கதிரையையோ உதைத்துவிடுவதையும் காணலாம். அல்லது மூர்க்கமாக செயற்படுவதற்கும் முற்படலாம். இதற்கான காரணம் என்னவென்றால் நல்ல பிள்ளை என்ற வார்த்தை குழந்தையின் துள்ளுதல், பாய்தல், ஓடுதல், ஏறுதல், ஆசைப்படுதல் போன்ற பல செயற்பாடுகளுக்கு தடையாக அமைகின்றது. அவ்வாறு மீறிச் செயற்படுவதன் மூலம் நான் நல்ல பிள்ளையாகவும் இருப்பேன் இச்செயல்களில் ஈடுபடுவதற்கு எனக்கு அனுமதிக்க வேண்டும் என்றவாறு நடந்துகொள்கிறது.

நல்லபிள்ளை என்பதன் மூலம் நாம் எதை நாடுகின்றோம்? என்ற குழப்பம் இந்த வார்த்தையிலிருக்கிறது. குழந்தையின் பௌதீக உடல் அமைப்பை வைத்து கூறுகிறோமா? அல்லது அது புரிகின்ற செயல்களை வைத்து கூறுகின்றோமா? நல்ல பிள்ளையென்றால் எதில் நல்லபிள்ளை? எந்தச் செயலில் நல்லபிள்ளை? என்ற தெளிவை வழங்கவேண்டும். இல்லாவிட்டால் பிள்ளையைப் பற்றிய அதிகூடிய பிம்பத்தை ஏனையவர்களுக்கு மத்தியில் நாம் உருவாக்கிவிடுவோம். இது பிள்ளையின் எதிர்கால வாழ்வில் பலசிக்கல்களை உருவாக்கிவிடும். நல்ல பிள்ளை என்ற பிம்பம் அக்குழந்தையை அப்படியே செயலற்றவனாக்கிவிடுகிறது.

'குழந்தையின் செயல்களைத்தான் பாராட்ட வேண்டும். குழந்தையைப் பாராட்டக்கூடாது' என்று உளவியலாளர்கள் கூறுகின்றனர். 'செயலைப் பாராட்டாதவன் எண்ணத்தையும் பாராட்டமாட்டான்' என அஹ்மத் முஹம்மத் ராஷித் கூறுகின்றார். குழந்தை கட்டிய மணல்வீட்டையோ அது வரைந்த சித்திரத்தையோ பாராட்டும்போது குழந்தை அச்செயல்களில் மேலும் திறம்படச் செய்ய முற்படும். இதைவிட அழகாக, நேர்த்தியாகச் செய்வது எப்படி என்றெல்லாம் பெற்றோரின் ஆலோசனையை எதிர்பார்த்து நிற்கும்.

மாறாக நல்லபிள்ளை என்ற வார்த்தை குழந்தையின் மனதில் கர்வத்தையும் பெருமைக் குணத்தையுமே தோற்றுவிக்கின்றது. தான் மட்டும்தான் நல்லபிள்ளை ஏனையவர்கள் எல்லாம் கெட்டவர்கள் என்ற எண்ணத்தையும் ஏற்படுத்திவிடும். இதனால் பிறரை மதிக்காத குழந்தையாக அது உருவாகும். இது ஆரோக்கியமானது அல்ல.

இது பற்றி டொக்டர் ஹெய்ம் ஜி இனோட் குறிப்பிடும் போது புகழ்ச்சி குழந்தைகளின் தற்துணிச்சலையும் பாதுகாப்பு உணர்வையும் வளர்த்துவிடுகின்றது என்று பலரும் நம்புகிறார்கள். ஆனால் நடைமுறையில் மனஅதிர்ச்சியையும் தவறான நடவடிக்கைகளையும் கூட அது ஏற்படுத்தக் கூடும். பெரும்பாலான குழந்தைகள் தமது குடும்ப அங்கத்தவர்கள் குறித்து சிலவேளைகளில் மோசமான அழிவுத்தனமான விருப்பங்கள் உடையவர்களாக இருப்பதுண்டு. இவ்வாறான சந்தர்ப்பங்களில் பெற்றோர்கள் நீ எவ்வளவு ஒரு நல்லபிள்ளை என்று சொல்லிப் புகழும் போது அந்தக் குழந்தையால் அதை ஏற்றுக் கொள்ள முடிவதில்லை. ஏனெனில் அக்குழந்தைக்கு தன்னைப்பற்றிய அபிப்பிராயம் வேறானதாக இருக்கின்றது. அதன் கண்ணோட்டத்தில் தானொரு நல்லபிள்ளையாக இருக்க முடியாது என்று நினைக்கின்றது. கொஞ்ச நாட்களுக்கு முன் தனது தாயின் வாய்க்கு ஒரு ஸிப் போடவேண்டுமென்றோ அல்லது தனது சகோதரன் அடுத்த சனி, ஞாயிறு விடுமுறையின் போது ஆஸ்பத்திரியில் இருந்தால் நல்லதென்றோ அது நினைத்திருக்கக் கூடும். உண்மையில் குழந்தை எவ்வளவுக்கு எவ்வளவு புகழப்படுகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு தனது நிஜத்தன்மையை காட்டுவதற்காக துடுக்குத்தனமாக நடந்துகொள்கிறது. குழந்தை அதன் நல்லசெயல் ஒன்றுக்காகப் புகழப்பட்டதும் அந்தப் புகழ்ச்சியை உண்மையல்ல என்று நிரூபிப்பதற்காக செய்வது போல மோசமாக நடந்துகொள்கிறது. இவ்வாறு குழந்தை செயலில் காட்டுவது தன்னைப்பற்றிய வெளியுலகின் அபிப்பிராயங்கள் குறித்த உடன்பாடின்மைகளை வெளிப்படுத்த குழந்தை பயன்படுத்துகின்ற வழிமுறையாக இருக்கக் கூடும்.

இந்த உண்மை எதைக்காட்டுகிறது. புகழ்ச்சி தேவையில்லை என்பதையா? இல்லை. மாறாக இது காட்டுவதெல்லாம் புகழ்ச்சியானது ஊசிமருந்தைப் போல கவனமில்லாமல் செய்யப்படக்கூடாது என்பதைத்தான். சக்திவாய்ந்த மருந்துகளைப் பயன்படுத்துவதற்கு பலவிதிமுறைகளும் முன்னெச்சரிக்கை ஒழுங்குகளும் இருக்கின்றன. நேர இடைவெளி, மருந்து கொடுக்கப்படும் கால அளவு ஒவ்வாமை ஏற்படக்கூடிய வாய்ப்பு என்பன குறித்து

இறுக்கமான விதிமுறைகள் உள்ளன. அவற்றில் மிகமிக முக்கியமான விதிதான் புகழ்ச்சியாகும். புகழ்ச்சி குழந்தையின் முயற்சியையும் செயலையும் பற்றியதாக இருக்கவேண்டுமேயொழிய குழந்தையின் இயல்பு குறித்ததாகவோ அதன் ஆளுமை குறித்தாகவோ இருக்கக்கூடாது. ஒரு குழந்தை தோட்டத்தைச் சுத்தம் செய்திருந்தால் அவன் எவ்வளவு கஷ்டப்பட்டு வேலை செய்துள்ளான், இப்போது தோட்டம் எவ்வளவு அழகாக இருக்கிறது என்று பாராட்டுத் தெரிவிப்பது செயலைப் பாராட்டுவதாகும். ஆனால் அவன் எவ்வளவு நல்லவன் என்று கூறுவது ஒரு விதத்திலும் பொருத்தமில்லாத சம்பந்தமில்லாத பாராட்டாகும். புகழ்ச்சி வார்த்தை குழந்தைக்கு அதன் செயலை கண்ணாடியில் பார்ப்பது போன்ற ஓர் உண்மையான படத்தை ஏற்படுத்த வேண்டுமேயொழிய அதனது ஆளுமை குறித்த ஒரு தெளிவற்ற கற்பனைத் தன்மையை வழங்குவதாக இருக்கக் கூடாது.

ஒரு நல்ல பிள்ளை என்ற பெயருடன் தன்னால் தொடர்ந்து இருக்க முடியாது என்று சங்கடப்படுகின்றது. நல்ல பிள்ளை என்ற பெயர் எப்போதாவது உடைந்து தனது உண்மைச் சொரூபம் தெரியவந்துவிடுமோ என்ற ஒருவகையான அச்சத்துடனேயே அத்தகைய ஒரு நிலையை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதைவிட தனது மனச்சுமையை உடனே குறைக்க சுலபமான ஒரு வழியைத் தேடுகிறது. உடனே ஏதாவது துடுக்கான செயலில் ஈடுபடுகிறது. ஒருவரது ஆளுமை குறித்த நேரடிப் புகழ்ச்சி நேரடிச் சூரிய ஒளிபோல அசௌகரியமானதும் கண்ணைக் குருடாக்குவதுமாகும். அற்புதமானவன், அதிமேதகு, கண்ணியமானவன், அடக்கமானவன் போன்ற சொற்களால் ஒருவரைப் புகழும்போது அவருக்கு அது தர்ம சங்கடத்தைக் கொடுக்கிறது. அவர் அதில் ஒருபகுதியையாவது மறுத்துரைக்கவே விரும்புவார். தன்னைப் புகழ்பவர்கள் குறித்து மீள்பரிசீலனை செய்வார். என்னை இவ்வளவுதூரம் சிறப்பாக நினைக்கிறார்கள் என்றால் இவர்கள் அவ்வளவு தூரம் புத்திசாலிகளாக இல்லாமலிருக்க வேண்டும் என்று எண்ணிக் கொள்வார். இதை உணர்ந்துதான் நபி (ஸல்) அவர்கள் புகழ்பவர்களின் முகத்தில் மண்ணை அள்ளி வீசும்படி எச்சரித்துள்ளார்கள். 'பரஸ்பரம் ஒருவருக்கொருவர் அளவுக்கு மீறிப் புகழ்வதை நான் உங்களுக்கு எச்சரிக்கிறேன். ஏனெனில் அது அறுவையாகும்'. இங்கு அறுவை எனக்குறிப்பிட்டது நேரவிரயத்தை ஏற்படுத்துவதைத்தான். அது புகழ்பவருக்கோ புகழப்படுபவருக்கோ எப்பயனையும் கொடுக்கப் போவதில்லை. செயலைப் பாராட்ட வேண்டுமே ஒழிய ஆளைப் பாராட்டக்கூடாது என்பதே இஸ்லாமிய உளவியலாகும்.

## உன்னைப் பற்றி வாப்பாவிடம் சொல்லிக் கொடுப்பேன்

மற்றெல்லா வார்த்தைகளைப் போல இந்த வார்த்தையிலும் அபாயமும் சிக்கலும் நிறைந்திருக்கின்றது. குழந்தைகள் வீட்டில் செய்யும் குழப்படிகளை கட்டுப்படுத்துவதற்காகவும் அல்லது வீட்டுக்கு வெளியே நடக்கும் செயல்களை நிறுத்தவும் தாய்மாரால் அடிக்கடி பிரயோகிக்கப்படும் வார்த்தையாக இருக்கின்றது.

குழந்தைகளின் ரகசியங்களை பகிரங்கப்படுத்துவது அல்லது அதற்குத் தண்டனை பெற்றுக் கொடுப்பது உளவியல் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதில் எந்த சந்தேகமும் கிடையாது. தந்தையிடம் தாய் சொல்லிக் கொடுக்கும் போது இன்னும் சில விளைவுகளும் ஏற்படுகின்றன. பெரும்பாலான குழந்தைகள் இந்தவிடயத்தில் புத்திகூர்மையுடன் செயற்படுகின்றன. தந்தைக்கு தமது ரகசியங்கள் தெரிந்துவிடும் என்பதால் இன்னும் ரகசியமாக செயற்படுவதற்கு அவர்கள் முற்படுகின்றனர். இதனால் குழந்தைகளின் ரகசியங்களையும் மறைவான செயல்களையும் அருகிலிருக்கும் தாயினால் அறியமுடியாமல் போகின்றது. அது குழந்தையைப் பயிற்றுவிப்பதில் பெரும்பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும்.

குழந்தை வளர்ப்பு என்பது பெரும் சிரமங்களையும் பொறுப்புக்களையும் தாங்கிய ஒரு பணியாகும். அதில் தாய் மட்டுமல்ல தந்தை, ஏனைய உறவினர்கள் எல்லோரும் சேர்ந்து பங்குகொள்கின்றனர். அப்பணியில் ஒருவரை மாத்திரம் தனியாக்குவது ஆரோக்கியமாகாது. அது தந்தைக்கும் குழந்தைக்குமிடையிலான உறவில் பாரிய விரிசலையும் இடைவெளியையுமே ஏற்படுத்தும். தந்தை பற்றிய ஓர் அதீத பிம்பத்தை, பயங்கர உருவத்தை குழந்தையின் மனதில் இந்த வார்த்தை பதிக்கின்றது. காலப்போக்கில் குழந்தை தந்தையை வெறுக்கும் நிலைக்கு ஆளாகின்றது. குழந்தைகள் தந்தையைவிட தாயுடனேயே அதிக நேரத்தைக் கழிக்கின்றன. இதனால் தந்தையைவிட குழந்தையைப் பற்றிய அதிக அறிவை தாயே பெறுகின்றாள். எனவே குழந்தையின் செயல்களில், ரகசியங்களில் எவற்றை வெளிப்படுத்த வேண்டும், எவற்றை வெளிப்படுத்தக் கூடாது என்பதற்கான மிகச்சரியான அளவுகோலை தாய்தான் உருவாக்கிக்

கொள்ள வேண்டும். எடுத்ததற்கெல்லாம் வாப்பாவிடம் உன்னைப் பற்றிச் சொல்லிக் கொடுப்பேன் என்று கூறக்கூடாது. அது சொல்லக்கூடாது என்று குழந்தை விரும்புகின்ற ஒரு ரகசியத்தைச் சொல்லிவிடுவாரோ என்ற அச்சத்தையும் மனக்குழப்பத்தையும் குழந்தைக்குத் தோற்றுவிக்கின்றது.

'தாய்தான் உன்னைப்பற்றி எனக்குக்கூறினாள்' என்று தந்தை குழந்தைக்குச் சொன்னால் அது தாயையும் வெறுக்கத் தொடங்கிவிடும். அல்லது தாயாரின் விடயத்தில் மிகவும் விழிப்புடனேயே நடந்துகொள்ள ஆரம்பிக்கும். இதனால் குழந்தைபற்றிய அறிவின் மிகப்பெரிய வாயில் மூடப்பட்டு விடுகின்றது.

இந்த வார்த்தையின் மற்றொரு அபாயம் எதைச் சொல்ல வேண்டும் எதைச் சொல்லக்கூடாது என்ற தெளிவின்மையையும் ஏற்படுத்திவிடுகின்றது. எல்லா ரகசியங்களையும் சொல்வதா? குழந்தைக்கென்று உரிய ரகசியங்களைப் பாதுகாப்பது குழந்தையின் உரிமையாகக் கருதப்படுமா? என்பதைத் தீர்மானிப்பதிலும் ஒரு மயக்க நிலைகாணப்படுகின்றது. எப்போது மறைக்க வேண்டும்? எப்போது வெளிப்படுத்த வேண்டும் என்பதைப் பொறுத்தவரையில் உளவியலாளர்கள் தெளிவான கருத்தைக் கொண்டுள்ளனர். ரகசியங்களைப் பாதுகாப்பது ஒரு பயிற்றுவித்தல் வழிமுறையாகவும் அவர்கள் கருதுகின்றனர். ரகசியங்களை எல்லாமாக வெளியிட்டுவிடுவதோ மொத்தமாக மறைத்துவிடுவதோ ஆரோக்கியமானதல்ல. ரகசியங்களின் தரத்துக்கேற்பவே அது தீர்மானிக்கப்படும். அந்த ரகசியங்கள் ஏற்படுத்தும் சாதக, பாதக நிலமைகளைப் பொறுத்தே வெளிப்படுத்துவதா இல்லையா என்ற முடிவுக்கு வரவேண்டும். சிலபோது வெளிப்படுத்துவதாலும் மறைப்பதாலும் சாதங்களும் பாதகங்களும் ஒரே நேரத்தில் ஏற்பட முடியும். எனவே, சாதக பாதங்களை மிகச்சரியாக அறிந்து செயற்படுவது அவசியமாகும். இந்த இடத்தில் புகழ்பெற்ற இஸ்லாமிய சட்டவிதி ஒன்று நினைவிற்கு வருகிறது. நலன்களைப் பெற்றுக் கொடுப்பதைவிட தீங்குகளை நீக்குவது முற்படுத்தப்பட வேண்டும் என்பதே அச்சட்ட விதியாகும்.

இஸ்லாமிய வழிபாடுகளில் பொடுபோக்காக இருத்தல், கற்றல் செயற்பாடுகளில் கவனக்குறைவு, பாடசாலையில் சகமாணவர்களை அடித்தல் போன்ற ரகசியங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டியதே. ஆனால் சில ரகசியங்களை வெளிப்டுத்தினால் குழந்தையிடம் எதிர்மறையான

நடத்தை தோன்றலாம். அல்லது குழந்தையின் கூட்டாளியின் ரகசியத்தை வெளியிடுமாறு கேட்பது குழந்தைக்கு சிக்கலை ஏற்படுத்திவிடும். சகபாடிகளுக்கிடையே நடைபெறும் செய்திப் பரிவர்த்தனைகளை அறிய முற்படுவதிலும் சிக்கல்கள் இருக்கின்றன.

இஸ்லாமிய வரலாற்றில் ரகசியம் பேணல் என்ற ஒரு முறை இருந்திருக்கின்றது. போர்ச்செய்திகளை நபி (ஸல்) அவர்கள் பொதுவான சபைகளில் மறைத்தே அறிவிப்புச் செய்வார்கள். இமாம் புஹாரி பதிவு செய்துள்ள ஒரு ஹதீஸில் நபி (ஸல்) அவர்கள் அனஸ் இப்னு மாலிக் (ரழி) அவர்களை ஒரு தேவைக்காக அனுப்பிவைத்தார்கள். இதனால் அனஸ் வீட்டுக்குப் பிந்தியே சென்றார்கள். அவரது தாயார் பிந்தியதற்கான காரணத்தைக் கேட்டார்கள். அதற்கு அனஸ் அது ரகசியம் என்று கூறினார்கள். அப்படியானால் இறைத்தூதரின் ரகசியத்தை வேறுயாருக்கும் கூறிவிடாதே எனத் தாயார் கட்டளையிட்டார். அவ்வாறே இமாம் கஸ்ஸாலி அவர்கள் தனது இஹ்யாவில் பின்வரும் சம்பவத்தைப் பதிவு செய்துள்ளார்.

உமர் (ரழி) அவர்கள் இப்னு அப்பாஸ் என்ற வயது குறைந்த நபித்தோழரை மூத்த தோழர்களைவிட முற்படுத்தி வந்தார்கள். இதைக்கண்ட அவரது தந்தை உன்னை உமர் பலவிடயங்களில் முற்படுத்துகின்றார். எனவே ஐந்து விடயங்களை நீ கவனமாகப் பின்பற்ற வேண்டும். அவற்றிலொன்று உமருடைய ரகசியங்களை நீ வெளிப்படுத்தக் கூடாது என்று கூறினார். இச்சம்பவங்களிலிருந்து குழந்தையின் எல்லா ரகசியங்களையும் தாய் தந்தையிடம் வெளிப்படுத்தக் கூடாது என்பதைக் காட்டுகிறது. அதே நேரம் குழந்தை ரகசியமாகப் புகைப்பது, மது அருந்தப் பழகுவது போன்ற பண்பாட்டுக்கு எதிரான செயல்களில் ஈடுபடுகின்ற போது கட்டாயம் தந்தைக்குத் தெரியப்படுத்த வேண்டும். பொலிஸிலோ அல்லது எதிரிகளோ குழந்தையைத் தண்டிப்பதற்கு முன்னால் அதை ரகசியம் எனக்கருதி தாய் பாதுகாக்கக் கூடாது.

உசாத்துணை

*01.* அப்துல்லாஹ் நாஸிஹ் உல்வான், தர்பியத்துல் அவ்லாத் பில் இஸ்லாம், பாகம்: *2*, பக்: *1015.*

*02.* கலாநிதி ஸ்போக், ஹதீஸ் இலல் உம்மஹாத்:மஷாக்கிலுல் ஆபா பீதர்பியத்தில் அப்னா, பக்: *454.*

*03.* முஹம்மத் அமீனுல் மிஸ்ரி, அல்மஸ்ஊலிய்யா, தாருல் அர்க்கம், இரண்டாம் பதிப்பு *1980* பக்: *25*

*04.* மஹ்மூத் மஹ்தி அல் இஸ்தன்பூலி, நகாயிசுல் அத்பால் வதரீக்கத்து இஸ்லாஹிஹா, பக்: *8,*

*05.* கலாநிதி யூசுப் அல் கர்ளாவி, அஸ்ஸஹ்வா அல் இஸ்லாமிய்யா: பைனல் இஹ்திலாபில் மஷ்ரூ:. வத்தபர்ருக்கில் மத்மூம், அர்ரிஸாலா, நான்காம் பதிப்பு *1995*, பக்: *44*

*06.* எக்ஸில் இதழ், ஜுலை *2003*, பக்: *24*

*07.* டொக்டர் ஹெயிம் இனோட், குழந்தைகளுக்கும் உங்களுக்கும் இடையே, மொழிபெயர்ப்பு, விக்னேஸ்வரன், மூன்றாவது மனிதன் பதிப்பகம், முதலாம் பதிப்பு *2001* பக்: *16*
*2005*

## பிற வெளியீடுகள்

1. முக்காடு (சிறுகதைத் தொகுப்பு)
   வை. அஹமத்
   *1999*

2. தரிசனம் - நிலவின் நிழலில் (குறு நாவல்கள்)
   வை. அஹமத்
   *1999*

3. நவீனத்துவத்தின் தோல்வி (கட்டுரைகள்)
   றவூப் ஸெய்ன்
   *2002*

4. சீறாவின் இயங்கியல் (ஆய்வு)
   ஏ.பி.எம். இத்ரீஸ்
   *2005*

5. இஸ்லாத்தில் சிறுவர் உளவியல் (உளவியல்)
   ஏ.பி.எம். இத்ரீஸ்

6. அதிகாரம் பற்றிய இரண்டு கண்ணோட்டங்கள் (கட்டுரைகள்)
   ஏ.பி.எம். இத்ரீஸ்
   *2006*

7. சிந்தனைகள் எவ்வாறு பிறக்கின்றன (சிந்தனைக் கட்டுரை)
   ஏ.பி.எம். இத்ரீஸ், தஸ்நிதி நஜீப் அர்ரபாஈ
   *2006*

பொது நூலகம்
உப அலுவலகம்
காங்கேசன்துறை

## நூல் இரவல் வழங்கும் நூலகம்

நூல்களை இரவலாகப் பெற்றுச் செல்வதற்கு முன்னர் தெரிவு செய்யப்பட்ட நூலின் நிலை பற்றி நன்கு பரிசீலித்து பார்த்து அவற்றின் பக்கங்களோ, அல்லது படங்களோ இல்லா திருந்தால் அல்லது அந்நூலில் வேறு ஏதாவது விதத்தில் சேதம் ஏற்பட்டிருந்தால் அதுபற்றி நூலகருக்கு அறிவிக்க வேண்டும்.

இந்நூலை கீழ்காணும் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

உயிர்ப்பைத் தேடும் வேர்கள்

உடனடிப்பயனைப் பெறுவதற்காக
குழந்தைகளைப் பயிற்றுவிப்போர்
தொடர்ச்சியாக சில
வார்த்தைகளைப் பிரயோகித்து
வருகின்றனர். அவ்வாறு
பிரயோகிக்கப்படும்
வார்த்தைகள் நல்லவையாகத்
தெரியவில்லை. அவை எமது
அடிப்படைக் கோட்பாடுகளையும்
வாழ்வியல் விழுமியங்களையும்
கடுமையாகப் பாதிக்கின்றன.
மிகமோசமான உளவியல்
பாதிப்புக்களை ஏற்படுத்தும்
அவ்வார்த்தைகளின்
அர்த்தங்களைத் தேடி இந்நூல்
பயணிக்கிறது.

ISBN [illegible]

விலை ரூ 100/-